**கவனிக்க.-** *27.06.2014 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II மற்றும் பகுதி IV(அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1870 - 2014 ජූලි මස 04 වැනි සිකුරාදා - 2014.07.04**

*1870 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு யூலை மாதம் 04 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 996 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1002 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2014, யூலை மாதம் 25 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2014, யூலை மாதம் 11 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு***

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

***பீ. எச். எல். வீ. டீ சில்வா,***
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2014 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

திருத்தம்

**இலங்கை பொலிஸ் திணைக்களம்**

பொலிஸ் பயிற்சியாளர்களை ஆட்சேர்த்துக்கொள்ளும் அலுவலகம்

**பெண் உப பொலிஸ் பரீட்சகர் பதவி மற்றும் பெண் பொலிஸ் கொஸ்தாப்பல்**

11.04.2014 ஆந் திகதிய 1858 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி I : தொகுதி (IIஅ) இன் பதவிகள் - வெற்றிடம் பகுதியின்கீழ் மேற்குறிப்பிடப்பட்ட அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதி 31.07.2014 ஆந் திகதிவரை நீடிக்கப் பட்டுள்ளது.

பொலிஸ் மா அதிபர்.

பொலிஸ் தலைமை அலுவலகம்,
கொழும்பு 01,
2014, யூன் 18.

7-85

---

**அரசாங்க சேவைகள் ஆணைக்குழு**

காணி, காணி அபிவிருத்தி அமைச்சு

**சட்ட அலுவலர் (நிறைவேற்று உத்தியோகத்தர் வகையின் III ஆம் தர) பதவிக்காக திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்தல்**

*காணி, காணி அபிவிருத்தி அமைச்சு - நில அளவைத் திணைக்களம்*

நில அளவைத் திணைக்களத்தில் சட்ட அலுவலர் பதவிக்காக கீழ்க்காணும் தகைமைகள் கொண்ட இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

ஆட்சேர்ப்பு முறை.- இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்திசெய்திருக்கும் விண்ணப்பதாரர்களிலிருந்து அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சைக் குழுவால் நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பதாரர்கள், நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கமைய ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள (இலக்கம் 6 இன்கீழ் குறிப்பிடப்பட்டுள்ள) புள்ளி வழங்கும் திட்டத்துக்கு அமைவாகக் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும்.

2. **தேவையான தகைமைகள் :-**

(i) *கல்வி/ தொழில்சார் தகைமைகள்.-* பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் சட்டம் குறித்த பட்டமொன்றை பெற்றிருத்தல்/ உயர் நீதிமன்றத்தில் ஒரு சட்டத்தரணியாகச் சத்தியப்பிரமாணம் பெற்றிருத்தல்.

(ii) *அனுபவம்.-* உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியொருவராக சத்தியப்பிரமாணம் செய்த பின் மூன்று (3) ஆண்டுகளுக்குக் குறையாத உயிர்ப்பான தொழில்சார் அனுபவமிருத்தல்.

(iii) *உடற்றகைமைகள்.-* ஒவ்வொரு விண்ணப்பதாரரும் இலங்கையின் எந்தவொரு பிரதேசத்திலும் பணிபுரிவதற்கும், பதவிக்குரிய பணிக் கடமைகளை மேற்கொள்வதற்கும் போதிய உடல் மற்றும் உள ஆரோக்கியத்தையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(iv) *ஏனையவை :*

* இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;
* விண்ணப்பதாரர்கள் சிறந்த நடத்தை உடையவராக இருத்தல் வேண்டும் ;
* விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதியன்று இப்பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்குத் தேவையான அனைத்துத் தகைமைகளையும் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

3. **சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகளும், சேவை நிபந்தனைகளும் :**

(i) இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். விதவைகள்/ தபுதாரர்கள், அநாதைகள் ஓய்வூதிய நிதியத்துக்கு உதவுதொகை செலுத்துதல் வேண்டும்.

(ii) நியமனம் மூன்று (3) வருட தகுதிகூர் நிலைக்கு உட்பட்டது. சட்ட அலுவலர் III ஆம் தரத்துக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு மூன்று (3) ஆண்டுகளுக்குள் ஆட்சேர்ப்புத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

(iii) அரசாங்க சுற்றுநிருப இல. 7/ 2007 இற்கு அமைவாகவும், அதனுடன் தொடர்புடைய சுற்றுநிருபங்களுக்கு அமைவாகவும் பதவியில் சேர்க்கப்பட்டு ஐந்து (5) ஆண்டுகளுக்குள் சேவையில் சேர்ந்த மொழிக்கு மேலதிகமாக மற்றைய அரச கரும மொழி தொடர்பில் உரிய தேர்ச்சி பெறுதல் வேண்டும். அரச கரும மொழியல்லாத மொழி மூலம் சேவையில் சேர்ந்த அலுவலர்களால் தகுதிகூர் காலத்தில் உரிய அரச கரும மொழியில் தேர்ச்சி பெறப்படல் வேண்டும்.

(iv) அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளுக்கும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை, நிதி ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுக்கும் திணைக்களம் சார் ஏனைய கட்டளைகளுக்கும் இந்நியமனம் உட்படும்.

4. **வயதெல்லை.-** விண்ணப்பதாரர்கள் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்தன்று 21 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

5. **சம்பள அளவுத்திட்டம்**.- இப்பதவி ரூ. 22,935 - 10 X 645 - 8 X 790 - 17 X 1,050 - ரூ. 53,555 மாதாந்தச் சம்பளத்திட்டத்திற்கு உரித்தானது. (2006.04.25 ஆந் திகதியிட்ட அ. நி. சு. இலக்கம் 6/2006 இல் எஸ்எல் 1 - 2006 குறியீட்டு இலக்கச் சம்பளப் படிமுறை).

6. கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்காகக் கீழ்க்காணும் புள்ளி வழங்கல் முறைமை அடிப்படையாகக் கொள்ளப்படும் :

| | விடயம் | | உச்சப் புள்ளிகள் |
|---|---|---|---|
| 1 | **மேலதிக கல்வித் தகைமைகள்** | | 20 |
| | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக மொன்றிலிருந்து பெற்ற சட்டம் குறித்த பட்டம்- | | |
| | * முதல் வகுப்புச் சித்திக்காக | 20 | |
| | * இரண்டாம் வகுப்பில் மேல் சித்திக்காக | 15 | |
| | * இரண்டாம் வகுப்பில் கீழ் சித்திக்காக | 10 | |
| | சட்டக் கல்லூரியின் இறுதி ஆண்டில் முதல் வகுப்புச் சித்திக்காக | 15 | |
| | சட்டக் கல்லூரியின் இறுதி ஆண்டில் இரண்டாம் வகுப்புச் சித்திக்காக | 10 | |
| | **குறிப்பு**.- சிறப்புச் சித்தியுடன் இறுதிப் பரீட்சையில் தேறியிருந்தால் மாத்திரம் 10 புள்ளிகள் வழங்கப்படல் வேண்டும். (அதிகூடிய தகைமைக்காக மட்டுமே புள்ளிகள் வழங்கப்படும். பட்டம் அல்லது சட்டக் கல்லூரித் தகைமைகளில் ஒன்றுக்கு மாத்திரம்.) | | |
| 2 | **மேலதிக தொழில்சார் தகைமைகள்** | | 15 |
| | அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் வழங்கப்படும் உரிய துறை குறித்த ஓராண்டுக்குக் குறையாத பட்டப்பின் படிப்பு டிப்ளோமா அல்லது பட்டப்பின் படிப்பு சட்ட டிப்ளோமா பாடநெறி ஒன்றுக்காக (ஒரு டிப்ளோமாவுக்கு 5 புள்ளிகள் வீதம்) | | |
| | அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் வழங்கப்படும் உரிய துறை சார்ந்த 6 மாதங்களுக்குக் குறையாத டிப்ளோமா பாடநெறி ஒன்றுக்காக (ஒரு டிப்ளோமாவுக்கு 3 புள்ளிகள் வீதம்) | | |
| | அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் வழங்கப்படும் உரிய துறை சார்ந்த 3 மாதங்களுக்குக் குறையாத சான்றிதழ் பாடநெறி ஒன்றுக்காக (ஒரு டிப்ளோமாவுக்கு 2 புள்ளிகள் வீதம்) | | |
| 3 | **மேலதிக அனுபவம்** | | 30 |
| | சட்டத்தரணியொருவராக அரச சேவையில் அல்லது தனியார் துறையில் அனுபவம் | | |
| | 6 மாதங்களுக்குக் கூடியதும் ஓராண்டுக்குக் குறைந்ததும் - 2 புள்ளிகள் | | |
| | ஒரு வருடத்துக்கு 5 புள்ளிகள் வீதம் ஆகக் கூடுதலாக 30 புள்ளிகள் | | |
| | (அடிப்படைத் தகைமை பெறுவதற்காகத் தேவையான சட்டத்தரணியாகப் பணி யாற்றிய 3 ஆண்டு காலத்தைத் தவிர்த்து) | | |
| | (20 ஆண்டுகளுக்குக் குறையாத சேவைக் காலத்தைப் பூரணப்படுத்திய சட்டத் தரணியினது அல்லது சனாதிபதி சட்டத் தரணியினது அல்லது நீதவான் ஒருவரிட மிருந்து பெறப்பட்ட சான்றிதழ் மூலம் மேலதிக அனுபவம் சான்றழிக்கப்பட வேண்டும்.) | | |
| 4 | **கணினி அறிவு** | | 15 |
| | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றில் பட்டப் படிப்புக்காகத் தகவல் தொழில்நுட்பத்தைப் பிரதான பாடங்களில் ஒன்றாய்ப் பயின்றிருத்த லுக்காக | 15 | |
| | அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவன மொன்றில் 1 ஆண்டுக் குறையாத அல்லது 1,500 மணித்தியாலங்களுக்குக் குறை யாத தகவல் தொழில்நுட்பம் தொடர் பான டிப்ளோமா பாடநெறிக்காக | 10 | |
| | அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவன மொன்றில் தகவல் தொழில்நுட்பம் தொடர்பான சான்றுப்பத்திர பாடநெறிக்காக : | | |
| | - 6 மாதம்/720 மணித்தியாலங்கள் | 07 | |
| | - 3 மாதம்/360 மணித்தியாலங்கள் | 05 | |
| 5 | **ஆங்கில மொழித்தேர்ச்சி** | | 15 |
| | ஆங்கில மொழி மூலத்தில் பயின்ற பட்டப் பின்படிப்பு/பட்டப்படிப்பு/சட்டக்கலைப் பட்டப் பின்படிப்பு/சட்டக்கலைப் பட்டப் படிப்பு (குறித்த பரீட்சை வினாத்தாள்கள் அனைத்தும் ஆங்கில மொழி மூலத்தி லேயே விடையளித்திருத்தல் வேண்டும்.) | 15 | |

| | விடயம் | | உச்சப் புள்ளிகள் |
|---|---|---|---|
| | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றிலோ அல்லது அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலோ ஆங்கில மொழி தொடர்பான டிப்ளோமா பாடநெறிக்காக (1 வருடம் அல்லது 1,500 மணித்தியாலங்கள்) | 10 | |
| | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றிலோ அல்லது அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலோ ஆங்கில மொழி தொடர்பான சான்றுப் பத்திர பாடநெறிக்காக- | | |
| | - 6 மாதம்/720 மணித்தியாலங்கள் | 07 | |
| | - 3 மாதம்/360 மணித்தியாலங்கள் | 05 | |
| 6 | நேர்முகப் பரீட்சையில் காண்பித்த திறமைகள் | | 05 |
| | மொத்தம் | | 100 |

7. **விண்ணப்பதாரர்களது ஆளடையாளம்**.- கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு சகல விதங்களிலும் பூரணமான விண்ணப்பப் படிவங்களைச் சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரர்கள் மாத்திரமே அழைக்கப்படுவர்.

நேர்முகப் பரீட்சையின்போது சகல சான்றிதழ்களதும் மூலப்பிரதிகளும் உரிய முறையில் சான்றுபடுத்தப்பட்ட பிரதிகளும் சமர்ப்பிக்கப் படல் வேண்டும்.

நேர்முகப் பரீட்சையின்போது தமது ஆளடையாளத்தை நிரூபிக்க கீழ்க்காணும் ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் :-

(1) ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளரால் வழங்கப்பட்டுள்ள தேசிய அடையாள அட்டை ;

(2) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

8. (அ) விண்ணப்பப்படிவங்கள் 2014.08.04 ஆந் திகதியன்றோ அல்லது அத்திகதிக்கு முன்போ கீழ்க்காணும் முகவரிக்குக் கிடைக்கத் தக்கதாக பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். அத்திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

நில அளவையாளர் நாயகம்,
நில அளவைத் திணைக்களம்,
இல. 150, கிருல வீதி,
நாராஹேன்பிட்டி,
கொழும்பு 5.

(ஆ) சமர்ப்பிக்கப்பட வேண்டிய விண்ணப்பப்படிவத்தின் மாதிரி வடிவம் இவ்வறிவித்தலின் இறுதியில் காணப்படுகிறது. விண்ணப்ப தாரர்கள் தத்தமது விண்ணப்பப்படிவங்களை ஏ4 அளவான தாளில் முதல் பக்கத்தில் இல. 1 முதல் 6 வரையும், இரண்டாம் பக்கத்தில் இல. 7 முதல் 10 வரையும், மூன்றாம் பக்கத்தில் இல. 11 முதல் 12.2 வரையும் உள்ள விடயங்கள் உள்ளடங்கும் வண்ணம் தயாரித்து சொந்தக் கையெழுத்தில் பூரணப்படுத்துதல் வேண்டும்.

(இ) விண்ணப்பப்படிவத்தை வைத்து அனுப்பும் கடித உறையின் இடதுபுற மேல் மூலையில் ''நில அளவைத் திணைக்களத்தில் சட்ட அலுவலர் பதவிக்கு விண்ணப்பித்தல்'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

(ஈ) விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரரின் கையொப்பம், அரசாங்கப் பாடசாலை ஒன்றின் அதிபர்/சமாதான நீதவான்/சத்தியப்பிரமாண ஆணையாளர்/சட்டத்தரணி/நொத்தாரிசு/முப்படைகளிலும் ஆணையிடும் தரத்திலுள்ள அதிகாரி/22,935 ரூபா மாதாந்தத் திரட்டிய சம்பளம் பெறும் அரசாங்கத்தில் நிரந்தரப் பதவி வகிக்கும் உத்தியோகத்தர் ஆகியோரில் எவரேனுமொருவரால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

(உ) தற்போது அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் பணிபுரியும் அலுவலர்கள் தமது விண்ணப்பப்படிவங்களைத் தாம் சேவையாற்றும் திணைக்களத்தின் திணைக்களத் தலைவரூடாகச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(ஊ) இத்துடனுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு அமைவாகாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவங்கள் காணாமல் போதல் அல்லது தாமதமாதல் குறித்த எந்தவொரு முறைப்பாடும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. **பொய்யான தகவல்களை வழங்குதல்**.- உங்களால் அனுப்பப் படும் விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனுமொரு தகவல் பொய்யானது அல்லது பிழையானது என்பது ஆட்சேர்ப்புச் செய்வதற்கு முன் வெளியானால் உங்கள் அபேட்சகர் தன்மை இரத்துச் செய்யப்படும்.

அவ்வாறு பொய்யான அல்லது பிழையான தகவலொன்று ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட பின் தெரியவரின் அதற்குரிய செயல்முறைகளுக்காகச் சேவையிலிருந்து நீக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

வெற்றிடங்களை நிரப்புவதற்கும் அல்லது நிரப்பாமலிருப்பதற்குமான உரிமை அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவுக்கே உரியது.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

செயலாளர்.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சு,
பத்தரமுல்லை,

மாதிரி விண்ணப்பப்படிவம்

**நில அளவைத் திணைக்களத்தில் சட்ட அலுவலர் பதவிக்கான ஆட்சேர்ப்பு**

(அலுவலக பயன்பாட்டிற்கு மாத்திரம்)

1. முதலெழுத்துக்களுடன் பெயர்- திரு./திருமதி/செல்வி :
   தமிழில் : ----.
   ஆங்கிலத்தில் :----.

   1.1 முதலெழுத்துக்களைக் குறிக்கும் பெயர்கள் (தெளிவான எழுத்துக்களில்) திரு./திருமதி/செல்வி :
   தமிழில் :----.
   ஆங்கிலத்தில் :----.

2. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

3. பிறந்த திகதி :

ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

3.1 விண்ணப்ப முடிவுத் திகதியன்று வயது :

வருடங்கள் : ☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள் : ☐☐

4. பால் (ஆண்-M, பெண்-F) :

5. நிரந்தர முகவரி (தெளிவான எழுத்துக்களில்) :----.

6. தொலைபேசி இலக்கம் :

வதிவிடம் :----. கையடக்க :----.

7. கல்வித் தகைமைகள் :

7.1 க. பொ. த. (உயர் தர) பரீட்சை பற்றிய விபரங்கள் :

(i) பரீட்சைக்குத் தோற்றிய ஆண்டும் மாதமும் :----.
(ii) சுட்டிலக்கம் :----.
(iii) சித்தியடைந்த பாடங்கள் :

| பாடங்கள் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |

7.2 பெற்றுள்ள பட்டம் பற்றிய விபரங்கள் :

(i) பல்கலைக்கழகம் :----.
(ii) பட்டம் பெற்ற ஆண்டு :----.
(iii) பெற்றுள்ள பட்டம் :----.

8. அனுபவம் :

(i) உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியொருவராகப் பணியாற்றியுள்ள காலம் :----.

9. குற்றச் செயலொன்றிற்கு எப்போதாவது நீதிமன்றத்தினால் குற்றவாளியாகக் காணப்பட்டீரா ? :

ஆம் : ☐ இல்லை : ☐

9.1 ஆம் எனின் அக்குற்றம் பற்றிய விபரங்களைத் தருக :----.

10. விண்ணப்பதாரரின் உறுதியுரை :

(அ) இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் எனது அறிவுக்கெட்டிய வரையில் உண்மையானதும் சரியானதும் என்று நான் இத்தால் உறுதிமொழிகின்றேன்.

(ஆ) என்னால் செய்யப்பட்டுள்ள இப்பிரகடனம் பொய்யானதென உறுதியாகுமிடத்து நான் சேவையில் சேர்த்துக்கொள்ளப் படுவதற்குத் தகுதியற்றவனாவேன் என்றும் நியமனம் பெற்ற பின் அவ்வாறு உறுதியாகுமிடத்து சேவையிலிருந்து நீக்கம் செய்யப்படுவதற்கு ஆளாவேன் என்றும் நான் அறிவேன்.

(இ) இங்கு குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு விபரத்தையும் பின்னர் மாற்ற மாட்டேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

11. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :

இந்த விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ............................... என்பவரை நான் தனிப்பட்ட ரீதியில் நன்கு அறிந்துள்ளேன். அவர் ........................... ஆந் திகதி என் முன்னிலையில் மேலே 10 ஆம் பந்தியின்கீழ் கையொப்ப மிட்டதாகவும் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

உறுதிப்படுத்துபவரின் பெயர் :----.
பதவிப் பெயர் :----.
முகவரி :----.
திகதி :----.
(பதவி முத்திரையால் சான்றுபடுத்தவும்.)

12. திணைக்களத் தலைவரின் பரிந்துரை (அரச/மாகாண சேவையில் உள்ள விண்ணப்பதாரர்களுக்கு மட்டும்) :

12.1 உத்தியோகத்தரின் சுய விபரக்கோவைக்கமைய விண்ணப் பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன்னர் அண்மித்த ஐந்து ஆண்டுகளுக்கு முன் வேலை, நடத்தை, வரவு திருப்திகரமானது/திருப்தியற்றது சகல சம்பள ஏற்றங்களையும் உழைத்துள்ளார்/உழைக்கவில்லை. எந்தவோர் ஒழுக்காற்றுத் தண்டனைக்கும் உள்ளாகவில்லை/ உள்ளாகியுள்ளார்.

12.2 விண்ணப்பிக்கும் பதவிக்குத் தெரிவுசெய்யப்பட்டால் தற்போதைய பதவியிலிருந்து இவ்வுத்தியோகத்தரை விடுவிக்க முடியும்/விடுவிக்க முடியாது. விண்ணப்பத்தை பரிந்துரை செய்கின்றேன்/செய்யவில்லை.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.
(பதவி முத்திரை)

திகதி :----.

7-155

## கல்வி அமைச்சு

### உடற்கல்வி பாடத்திற்காக இலங்கை ஆசிரிய சேவையின் 3 ஆம் வகுப்பில் I ஆம் தரத்திற்கு பட்டதாரி ஆசிரியர்களை சேர்த்துக்கொள்ளல் - 2014

உடல் உள சமநிலையுடன் தேகாரோக்கியம் மிக்க சந்ததியினரை தேசத்திற்குக் கையளித்தல் மற்றும் விளையாட்டுத் திறமைகள் கொண்டோரை விளையாட்டு வீரர்களாக மாற்றியமைப்பதற்காக உடற்கல்வி பாடத்திற்கு பட்டதாரிகளை ஆசிரியர்களாக சேர்த்துக் கொள்ளல்.

**1. ஆட்சேர்ப்பிற்கான தகைமைகள்.-**

1.1 பதவிக்குரிய கல்வித் தகைமைகள் .-

(i) க.பொ.த.(சா.தா) பரீட்சையில் தமிழ் மொழி மற்றும் கணிதம், உட்பட மூன்று (3) திறமைச் சித்திகளுடன் இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்த அல்லது பரீட்சை ஆணையாளரினால் இதற்கு சமமானது என கருதப்படும் ஏனைய தகைமைகளை பெற்றிருத்தல். முதல் அமர்வில் குறைந்தபட்சம் ஐந்து கட்டாய பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும். கட்டாய பாடம் எனப்படுவது: (i) சமயம் (ii)) தாய்மொழி (iii) ஆங்கிலம் (iv)கணிதம் (v)அழகியற் கல்வி (சித்திரம், நடனம், சங்கீதம், நாடகம் மற்றும் நடனம்/இலக்கியம்), (சிங்களம், தமிழ், ஆங்கிலம், அரபு), (vi) விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப வியல் (vii) சமூகக்கல்வி மற்றும் வரலாறு, (viii) தொழில்நுட்ப பாடம் (விவசாயம்/வர்த்தகம் மற்றும் கணக்கியல்/கைத்தறிக் கைத்தொழில்)

மற்றும்

(ii) க. பொ. த. (உ. த) பரீட்சையில் ஒரே தடவையில் குறைந்த பட்சம் மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல்,

மற்றும்

(iii) பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு சபையினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து அல்லது பட்டம் வழங்கும் நிறுவனமாக பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு சபையினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தினால் உரிய பாடம் தொடர்பாக பட்டத்தினை பெற்றிருத்தல்.

1.2 பொதுவான தகைமைகள் :

(i) இலங்கைப் பிரசையாக இருக்க வேண்டும்.
(ii) சிறந்த பழக்கவழக்கங்கள் மற்றும் தேக ஆரோக்கியம் கொண்டவராக இருத்தல் வேண்டும்.
(iii) விண்ணப்பப்படிவம் கோரும் 2014.07.18 ஆந் திகதி அன்று 21 வயதை விட குறையாத மற்றும் 35 வயதைவிட மேற்படாமல் இருத்தல் வேண்டும்.

**2. ஆட்சேர்ப்பு முறைகள் மற்றும் சேவை நிபந்தனைகள்:**

2.1 இவ்வறிவுறுத்தல்களுக்குரியதாக விண்ணப்பிக்கப்பட்ட விண்ணப்பதாரர்களுக்காக சேவைக்கு சேர்த்துக் கொள்ளும் நியமனப் பொறுப்பாளரினால் பணிக்கப்படும் கட்டமைக்கப் பட்ட நேர்முகப் பரீட்சை நடாத்தி, காணப்படும் ஆசிரியர் வெற்றிடங்களுக்காக தகைமை கொண்டோர் தேர்ந்தெடுக்கப் படுவர். இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமையற்ற விண்ணப்பதாரர்கள் நேர்முகப்பரீட்சைக்காக அழைக்கப்பட மாட்டார்கள்.

2.2 தகைமைகள் பூரணப்படுத்தப்பட்ட பாடத்துக்குரியதாக நியமனம் பெற விரும்பும் வதியும் இடத்திற்கு அருகாமை யிலுள்ள ஐந்து பாடசாலைகளை தொடராக பெயரிட்டு நேர்முகப்பரீட்சையில் தகைமை பெறும் நியமனதாரர்களுக்கு தேசிய பாடசாலை வெற்றிடம் கொண்ட பெயர்ப் பட்டியலை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**குறிப்பு**.- அவ்வப் பாடங்களுக்கு அமைய விண்ணப்பதாரி களினால் பெயரிடப்பட்ட விருப்பத்தொடருக்கு அமைய முன்னுரிமை வழங்கப்படும். அத்துடன் பாடசாலையில் காணப்படும் பாடத்துக்கு உரியதான வெற்றிட எண்ணிக் கையை விட கூடுதலான விருப்பத் தொடர்கள் காணப்படும் வேளையில் கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சையில் பெறும் புள்ளி அளவிற்குப் அமைய முன்னுரிமை வழங்கப்படும். ஒரு பாடசாலையைக் கோரியுள்ள விண்ணப்பதாரிகளில் பலர் சமமான புள்ளிகளைப் பெற்றுள்ள வேளையில் பாடசாலைக் குரிய தூர அளவிற்கு அமைய முன்னுரிமை வழங்கப்படும். இவ் ஒப்பளவுகளுக்கு அமைய தகைமை பெறும் விண்ணப்ப தாரர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர்.

2.3 அரச நியமனத்தினைக் கட்டுப்படுத்தும் பொது நிபந்தனை களுக்கும் இலங்கை ஆசிரிய சேவை பிரமாணக் குறிப்பின் மூலம் விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கும் அப்பிரமாணக் குறிப்பினால் மேற்கொள்ளப்பட்டுள்ள மற்றும் இதற்குப் பின்னர் விதிக்கப்படும் சீர்திருத்தங்களுக்கு உட்பட்ட பரீட்சார்த்திகள் இலங்கை ஆசிரியர் சேவையில் 3-1 தரத்துக்கு சேர்த்துக்கொள்ளப்படுவர். இப்பதவிக்குரிய மாதாந்த சம்பள அளவு 2007.08.24 ஆம் திகதி பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 6/2006 (IV) இற்கமைய இந்நியமனத்துக்குரிய சம்பள குறியீடுஇலக்கம் TS-1-2006 A கொண்ட சம்பள அளவு (மாதாந்த ரூபா 14,135-180 × 9-240 × 6-330 × 5-400 × 7-645 × 13- ரூபா30,030.) ஆகும். மாதாந்த சம்பள அளவில் நிலைப்படுத்தப்படுவீர்கள்.

2.4 இந்நியமனம் நிரந்தரமானது. ஓய்வூதிய உரித்துக்கொண்டது.

2.5 பதவி உயர்வு இலங்கை ஆசிரியர் சேவை பிரமாணக் குறிப்பின் ஒழுங்கு விதிமுறைக்கு அமைய மேற்கொள்ளப்படும்.

2.6 இந்நியமனம் இலங்கை ஆசிரியர் சேவையில் இடமாற்ற ஒழுங்கு விதிகளுக்கு அமைய மேற்கொள்ளப்படும்.

**3. விண்ணப்பிக்கும் முறை:**

3.1 விண்ணப்பப்படிவம் இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி படிவத்துக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் A4 அளவு கடதாசியில் இரு பக்கங்களையும் பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை பரீட்சார்த்தியினால் பூர்த்தி செய்ய வேண்டும்.

3.2 சரியாகப் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தை 2014.07.18 ஆந் திகதி அன்று அல்லது அதற்கு முன்னர் செயலாளர் கல்வி அமைச்சு, இசுருபாய, பத்தரமுல்லை. என்ற முகவரிக்கு பதிவு தபாலில் அனுப்பப்பட வேண்டும்.

விண்ணப்பப்படிவத்தை இட்டு அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "உடற் கல்வி பாடத்துக்காக இலங்கை ஆசிரிய சேவையில் 3-1 தரத்திற்கு சேர்த்துக் கொள்ளல்" எனக் கட்டாயமாகக் குறிப்பிடப்பட்டு இருக்க வேண்டும்.

4. விண்ணப்பப்படிவம் கிடைக்கப்பெற்றதாக அறிவிக்கப்பட மாட்டாது. தபாலில் காணாமல் போகும் விண்ணப்பப்படிவம் தொடர்பில் அமைச்சினால் பொறுப்பு கூறப்படமாட்டாது.

5. உரிய தினத்திற்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

6. இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் மாதிரிப்படிவத்திற்கு ஒவ்வாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

7.ஏற்கனவே சேவையில் ஈடுபட்டுள்ள விண்ணப்பதாரர்கள் தமது நிறுவனத் தலைவர் ஊடாக உறுதி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தை சமர்ப்பிக்க வேண்டும்.

8. அவ்வறிவித்தலில் தழுவப்படாத ஏதேனும் ஒரு விடயம் இருப்பின் அது தொடர்பாக தீர்மானம் எடுக்கும் உரிமையும், வெற்றிடங்களில் ஒரு பகுதி அல்லது முழுமையாக நிரப்புதல் அல்லது நிரப்பாமல் இருப்பது தொடர்பாக இறுதித் தீர்மானம் எடுக்கும் உரிமையும் கல்வி அமைச்சின் செயலாளருக்கே உரியதாகும்.

**அட்டவணை 1**

விளையாட்டுப் பாடத்திற்கமைய கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை சபையினால் வழங்கப்படும் தலைப்பிற்குரியதாக 5 நிமிட சமர்ப்பித்தல் மேற்கொள்ளப்பட வேண்டும்.

| புள்ளி வழங்கும் ஒழுங்கு விதி முறைகள் | புள்ளிகள் |
|---|---|
| நோக்கம்/பாட பிரவேசம் | 10 |
| பிள்ளையில் கவனத்தை ஈர்க்கச் செய்வதற்கான முயற்சி | 10 |
| நோக்கங்களை நிவர்த்தி செய்தல் | 10 |
| குரல் நிர்வாகம், பார்வை மற்றும் ஆளுமை | 10 |
| முகாமைத்துவம் | 10 |
| **மொத்தப் புள்ளிகள்** | **50** |

**விசேட தகைமைகள்**.- சர்வதேச மற்றும் அகில இலங்கை விளையாட்டுத் தகைமைகள் - 30

ஏனைய விளையாட்டுத் திறமைகள் - 20

**குறிப்பு**.- விளையாட்டுத் திறமைகளைக் கருத்தில் கொள்ளும் போது கோட்ட, வலய மற்றும் மாகாண மட்ட விளையாட்டுத் திறமைகள் மாத்திரமே கருத்தில் கொள்ளப்படும்.

அநுர திசாநாயக,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
இசுரு பாய,
பெலவத்த,
பத்தரமுல்லை,
2014, யூலை 04.

மாதிரி விண்ணப்பப் படிவம்

[ ]
(அலுவலக பயன்பாட்டிற்காக)

**கல்வி அமைச்சு**

உடற்கல்வி பாடத்திற்காக இலங்கை ஆசிரிய சேவையில் 3-I ஆம் தரத்திற்கு பட்டதாரி ஆசிரியர்களை சேர்த்துக்கொள்ளல்- 2014

1.1 முதல் எழுத்துக்களை இறுதியில் குறிப்பிட்டு முதல் எழுத்துக் களுடன் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.
(உ+ம் : PERERA A.B)

1.1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் (தமிழ் எழுத்தில்) :----.

1.2 முதல் எழுத்துக்களினால் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.

1.2.1 முதல் எழுத்துக்களினால் குறித்துக் காட்டப்படும் பெயர் (தமிழில்) :----.

2. தற்போதைய முகவரி : (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.

2.1 தற்போதைய முகவரி: (தமிழில்) : ----.

2.2 நிரந்தர வதியும் மாவட்டம் :----. மாகாணம்:----.

3. ஆண் /பெண் : (ஆண்-0, பெண்-1) [ ]
(உரிய இலக்கத்தினை அடைப்பினுள் எழுதவும்)

3.1 பிறந்த திகதி :

வருடம் [ | | | ] மாதம் [ | ] திகதி [ | ]

3.2 2014.07.18 ஆந் திகதியன்று வயது:

வருடங்கள் [ | ] மாதங்கள் [ | ] நாட்கள் [ | ]

3.3 தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம்:

[ | | | | | | | | | ]

3.4 தொலைபேசி இலக்கம் : (கையடக்க) :----.

3.5 மின்னஞ்சல் முகவரி: ----.

4. கல்வித் தகைமைகள் தொடர்பான விபரங்கள்:

4.1 க.பொ.த.(சா.த.) பரீட்சை

வருடம் :----. சுட்டெண் :----.

| பாடங்கள் | தரம் |
|---|---|
| 1. ........................................ | ........................................ |
| 2. ........................................ | ........................................ |
| 3. ........................................ | ........................................ |
| 4. ........................................ | ........................................ |
| 5. ........................................ | ........................................ |
| 6. ........................................ | ........................................ |
| 7. ........................................ | ........................................ |
| 8. ........................................ | ........................................ |

4.2 க.பொ.த. (உ.த.) பரீட்சை :

வருடம் :----. சுட்டெண் ----.

| பாடங்கள் | தரம் |
|---|---|
| 1. ...................................... | .......................................... |
| 2. ...................................... | .......................................... |
| 3. ...................................... | .......................................... |
| 4. ...................................... | .......................................... |

5. உயர் கல்வித் தகைமைகள்:

5.1 பெற்றுள்ள பட்டம்:----.

5.2 பல்கலைக்கழகம்:----.

5.3 பட்டம் செல்லுபடியாகும் திகதி:----.

5.4 பட்டத்திற்குத் தொடர்ந்துள்ள பிரதான பாடம்/பாடங்கள் :

| |
|---|
| |
| |
| |
| |

5.5 பட்டம் பெற்றுள்ள மொழி :----.

5.6 ஏனைய உயர்கல்வித் தகைமைகள் :----.

5.7 சர்வதேச மற்றும் அகில இலங்கை விளையாட்டுத் திறமைகள்: ----.

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டிய வகையில் உண்மையானதென தெரிவிக்கிக்கின்றேன். நான் இப்பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட பின் தகைமையற்றவர் என தெரியவரும் பட்சத்தில் சேவையில் இருந்து நீக்குவதற்கும் கட்டுப்படுகிறேன். இங்கு குறிப்பிடப் பட்டுள்ள தகவல்களை பின்னர் மாற்றியமைக்க மாட்டேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி ----.

**6. விண்ணப்பதாரி அரச ஊழியராயின் திணைக்களத் தலைவரின் உறுதியுரை :**

திரு./ திருமதி/ செல்வி ................................................................ இவ்வமைச்சின் ............................................ திணைக்களத்தில் நிரந்தர / தற்காலிக/ சமயாசமய ஊழியராக சேவையாற்றுவ தாகவும் இப்பதவிக்காக தேர்ந்தெடுக்கும் பட்சத்தில் சேவையில் இருந்து இவரை விடுவிக்க முடியும்/ விடுவிக்க முடியாது என அறிவிக்கின்றேன்.

----,
திணைக்களத் தலைவர் அல்லது
அதிகாரம் கொண்ட உத்தியோகத்தர்.

பதவி :----.
அமைச்சு/ திணைக்களம் :----.
திகதி :----.

7-156

---

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

அறநெறிப் பாடசாலை இறுதிச் சான்றிதழ் பரீட்சை,
இந்துசமயம் – 2013

**பரீட்சை நிபந்தனைகளும் பாடத்திட்டமும்.**- மேற்படி பரீட்சை 2014 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதத்தில் பரீட்சை ஆணையாளர் நாயகம் அவர்களினால் இலங்கை முழுவதும் நடாத்தப்படும்.

2. **பரீட்சை நடைபெறும் நிலையங்கள்.**- விண்ணப்பதாரிகளின் தொகைக்கேற்ப நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் பரீட்சை நிலையங்கள் அமைக்கப்படும்.

எனினும், குறிப்பிட்ட தொகையான விண்ணப்பதாரிகள் ஒரு பரீட்சை நிலையத்திற்கு விண்ணப்பிக்காத பட்சத்தில், அப்பரீட்சை நிலையம் இரத்துச் செய்யப்பட்டு, அருகிலுள்ள வேறொரு பரீட்சை நிலையத்தில் தோற்றுமாறு விண்ணப்பதாரிகள் கோரப்படுவர். நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் பரீட்சை நிலையங்கள் நிறுவப்பட உத்தேசிக்கப் பட்டுள்ள நகரங்கள் தொடர்பான விபரங்கள் இவ்வறிவித்தலின் இறுதியிலே சேர்க்கப்பட்டுள்ள இணைப்பு I இல் காட்டப்பட்டுள்ளன.

3. **மொழிமூலமும் பாடத்திட்டமும்** :

3.1 இப்பரீட்சைக்குரிய பாடத்திட்டம் பின்னிணைப்பு 2 இல் காட்டப்பட்டுள்ளது.

3.2 இப்பரீட்சை தமிழ் மொழியில் மாத்திரம் நடாத்தப்படும்.

4. **தகைமை.**- இப்பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் விண்ணப்பதாரி கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகைமையைக் கொண்டவராக இருத்தல் வேண்டும் :-

4.1 இப்பரீட்சை இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக் களத்தில் பதிவுசெய்யப்பட்ட இந்து அறநெறிப் பாடசாலை களிற் பயிலும் மேற்பிரிவு மாணவர்களுக்கானது. மேற்பிரிவில் பத்தாம் ஆண்டில் சித்திபெற்று, பதினோராம் ஆண்டில் கல்வியை மேற்கொள்பவர்களும் ஏற்கனவே இப்பரீட்சையில் தோற்றி சித்தியடையாதவர்களும் இப்பரீட்சைக்குத் தோற்ற முடியும்.

**குறிப்பு.**- (அ) இப்பரீட்சைக்குத் தோற்றவுள்ள விண்ணப்பதாரி மேற்குறித்த தகைமையைப் பெற்றுள்ளார் என்பதனை இந்து அறநெறிப் பாடசாலையின் அதிபர் அல்லது பொறுப்பாளர் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(ஆ) பதிவுசெய்யப்பட்ட அறநெறிப் பாடசாலையொன்றின் ஊடாக மட்டுமே இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியும்.

5. கடந்த ஆண்டில் மாணவர்களை பரீட்சைக்கு அனுப்பிவைத்த எல்லா இந்து அறநெறிப் பாடசாலைகளுக்கும் போதுமான விண்ணப்பப்படிவங்களும் அறிவுறுத்தல்களும் தபால் மூலமாக அனுப்பி வைக்கப்படும். விண்ணப்பப்படிவம் கிடைக்காத, அல்லது 2012 (2013) ஆம் ஆண்டுப் பரீட்சைக்கு விண்ணப்பதாரிகளை அனுப்பாத

இந்து அறநெறிப் பாடசாலை ஆயின் பாடசாலையின் பெயர், முகவரி, தோற்றவுள்ள விண்ணப்பதாரிகளின் தொகை போன்ற விபரங்களைக் குறிப்பிட்டு 5.3 பிரிவிற் குறிப்பிட்ட முகவரிக்கு 2014.07.18 ஆந் திகதிக்கு முன்னர் அறிவிக்க வேண்டும் :

5.1 விண்ணப்பப்படிவங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி 2014.08.11 ஆந் திகதி ஆகும்.

5.2 விண்ணப்பப்படிவங்கள், தெளிவாகவும் பிழையின்றியும் நிரப்பப்படல் வேண்டும். அங்ஙனம் நிரப்பப்படாத விண்ணப்பங்களும், இறுதித் தினத்திற்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

5.3 பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் பதிவுத்தபால் மூலம் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும் :-

பரீட்சை ஆணையாளர் நாயகம்,
ஒழுங்கமைப்பு வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை,
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
தேசிய மதிப்பீட்டிற்கும், பரீட்சித்தலுக்குமான சேவை,
பெலவத்தை, பத்தரமுல்லை.

விண்ணப்பங்கள் கிடைத்தமை தொடர்பாக அறிவிக்கப்பட மாட்டாது.

5.4 விண்ணப்பங்களை இணைத்து அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "அறநெறிப் பாடசாலை இறுதிச் சான்றிதழ் பரீட்சை, இந்து சமயம் - 2013" எனவும் பரீட்சைக்குத் தோற்ற விண்ணப்பிக்கும் நகரமும் குறிப்பிடப்படல் வேண்டும்.

5.5 விண்ணப்பங்களோடு எவ்வித சான்றிதழ்களையும் இணைத்து அனுப்பக்கூடாது. இந்து அறநெறிப் பாடசாலை யின் அதிபர் அல்லது பொறுப்பாளர், விண்ணப்பதாரி குறித்த தகைமையைப் பெற்றுள்ளாரென்பதை உறுதிப்படுத்தல் வேண்டும்.

6. **பரீட்சைக் கட்டணம்**.- முதற்தடவையாகத் தோற்றுபவர்கள், பரீட்சைக் கட்டணம் செலுத்த வேண்டியதில்லை. ஏனையோருக்கான பரீட்சைக் கட்டணம் 150 ரூபா ஆகும். நூன சித்தி பாடமொன்றிற்கு 50 ரூபா ஆகும் :

6.1 பரீட்சைக் கட்டணம் செலுத்தவேண்டிய விண்ணப்பதாரிகள் (தமது அறநெறிப் பாடசாலை முதல்வரூடாக) நாட்டின் எந்தவொரு தபால் அலுவலகத்திலும் உரிய பணத்தைச் செலுத்தி, பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டினை விண்ணப்பப் படிவத்தின் மறுபுறத்தில் ஒட்டி அனுப்பவேண்டும். (முத்திரை/காசுக் கட்டளை மூலமாக பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்த முடியாது.) பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 இன் கீழ் கட்டணம் செலுத்தப்படல் வேண்டும்.

6.2 அறநெறிப் பாடசாலை முதல்வர்கள் உரிய பரீட்சார்த்திகளிட மிருந்து பெற்றுக்கொள்ளும் பரீட்சைக் கட்டணத்தை மொத்தமாக அருகாமையிலுள்ள தபாலகத்தில் செலுத்தி பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தின் மறுபுறத்தில் ஒட்டி அனுப்புதல் வேண்டும்.

6.3 எக்காரணம் கொண்டும் இப்பரீட்சைக்குச் செலுத்தப்பட்ட கட்டணம், வேறொரு பரீட்சைக்கு மாற்றப்படவோ, மீளப்பெறவோ இயலாததாகும்.

7. பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் உரிய அறநெறிப் பாடசாலை அதிபர்கள்/பொறுப்பாளர்கள் மூலமாக விநியோகிக்கப்படும்.

7.1 சகல விண்ணப்பதாரிகளும் தாம் முதலாவதாகப் பரீட்சைக்குத் தோற்றும் நாளிலேயே தமது கையொப்பம் சான்றுறுதி செய்யப்பட்ட அனுமதி அட்டையை பரீட்சை நிலைய மேற்பார்வையாளரிடம் ஒப்படைக்க வேண்டும். விண்ணப்பதாரி ஒருவர் தமது அனுமதி அட்டையைச் சமர்ப்பிக்காத போதோ அல்லது, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் குறிப்பிடப்பட்ட பரீட்சை நிலையம் தவிர்ந்த வேறொரு நிலையத்தில் தோற்றும்போதோ அவரது பரீட்சார்த்தித் தகவு இரத்துச் செய்யப்படும்.

7.2 அனுமதி அட்டையில் விண்ணப்பதாரியின் கையொப்பம், இந்து அறநெறிப் பாடசாலை அதிபர் மூலம் குறித்த விண்ணப்பதாரிகளுடையது என உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

7.3 பரீட்சை நடைபெறுவதற்கு ஏழு தினங்களுக்கு முன் அனுமதி அட்டைகள் கிடைக்காதவிடத்து விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த இந்து அறநெறிப் பாடசாலையின் அதிபர், இவ்விடயத்தைப் பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு அறிவித்தல் வேண்டும். அத்தகைய எல்லாச் சந்தர்ப்பங்களிலும் கீழ்வரும் விடயங்கள் தெரிவிக்கப்படல் வேண்டும் :-

1. பரீட்சையின் பெயர் ;
2. அறநெறிப் பாடசாலையின் பெயர் ;
3. விண்ணப்பதாரியின் முழுப்பெயரும் விலாசமும் ;
4. விண்ணப்பித்த பரீட்சை நிலையம்/நகரம் ;
5. விண்ணப்பங்களைப் பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைத்த தபால் அலுவலகம் ;
6. பதிவு இலக்கமும், திகதியும்.

8. **ஆளடையாளத்தை உறுதிப்படுத்தல்**.- இந்து அறநெறிப் பாடசாலை ஒன்றின் மூலம் தோற்றும் மாணவர்கள், பரீட்சை நிலையத்தில் ஒவ்வொரு பாடத்திற்குத் தோற்றும் சந்தர்ப்பத்திலும், பரீட்சை நிலைய மேற்பார்வையாளர் ஏற்றுக்கொள்ளத்தக்கவாறு தமது ஆளடையாளத்தை நிரூபிப்பதற்குத் தயாராகச் சமுகமளித்தல் வேண்டும். இதற்கு கீழ்வரும் ஆவணங்களுள் ஒன்று ஏற்றுக்கொள்ளத்தக்கதாகும்.

8.1 ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளரினால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை ;

8.2 செல்லுபடியாகும் கடவுச்சீட்டு (Passport).

9. **சித்திபெற்றமையை தீர்மானித்தலும், பரீட்சை முடிவுகளை வெளியிடலும்**.- இப்பரீட்சைக்குரிய பாடங்கள் 4 ஆகும். குறித்த நான்கு பாடங்களிலும் சித்திபெறும் பரீட்சார்த்திகள் மட்டும் இப்பரீட்சையில் சித்திபெற்றோராகக் கருதப்படுவர். ஒரே தடவையில் மூன்று பாடங்களில் சித்திபெற்று ஒரு பாடத்தில் மற்றும் சித்திபெறத் தவறுவோர் நூன சித்தி பெற்றோராகக் கருதப்படுவர். அவர்கள் அடுத்து வரும் இரண்டு வருடகால பரீட்சைகளுக்குள் நூன சித்திப் பாடத்திற்குத் தோற்றி சித்தி பெற்றால், பரீட்சையில் சித்திபெற்றோராகக் கணிக்கப்படுவர்.

9.1 பரீட்சை முடிவுகளை வெளியிடல்.- விண்ணப்பதாரிகளின் பரீட்சை முடிவுகள் பற்றிய விவரங்கள் இந்து அறநெறிப் பாடசாலை அதிபர்/பொறுப்பாளருக்குத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும்.

*10.* **சான்றிதழ்**.- இப்பரீட்சையிற் சித்திபெறும் அனைத்து பரீட்சார்த்திகளுக்கும் சான்றிதழ்கள் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

*11.* **பரிசு**.- இப்பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளுள் அதிகூடிய புள்ளிகளைப் பெற்று சித்திபெறுவோருக்கு பரிசுகள் வழங்குவதற்கான ஏற்பாடுகள் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும்.

*12.* **விடைத்தாள்களை மீள்பரிசீலனை செய்தல்**.- பரீட்சை முடிவுகள் வெளியாகி 30 நாட்களுக்குள், இத்திணைக்களத்தினால் விநியோகிக்கப்படும் படிவங்கள் மூலம் இந்து அறநெறிப் பாடசாலை அதிபர்/பொறுப்பாளர் கோரியிருப்பின், விடைத்தாள்கள் மீள் பரிசீலனைக்கு வாய்ப்பு வழங்கப்படும். இதற்குரிய கட்டணத் தொகை அவ்வப்போது மாற்றம் பெறுவதால், குறித்த தொகை உரிய பத்திரத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும். இக்கட்டணம், பரீட்சை பெறுபேறுகளில் மீள் பரிசீலனையின்போது திருத்தம் இருப்பின் மட்டும் மீளச் செலுத்தப்படும். எக்காரணங்கொண்டும் விண்ணப்பதாரிக்கோ அல்லது அவரது பிரதிநிதிகளுக்கோ விடைத்தாள்களைப் பார்ப்ப தற்கான அனுமதி வழங்கப்படமாட்டாது.

*13.* இங்கு குறிப்பிடப்படும் அனைத்து நிபந்தனைகளுக்கும் அறிவுறுத்தல்களுக்கும் அமைய நடந்துகொள்வதற்கு எல்லா விண்ணப்ப தாரிகளும் கட்டுப்பட்டுள்ள அதேவேளை, இங்கு குறிப்பிடப்படாத ஏதேனும் விடயங்கள் இருப்பின் அவை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தற்றுணிபுக்கேற்பத் தீர்மானிக்கப்படும்.

டபிள்யூ. எம். என். ஜே. புஷ்பகுமார,
பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
ஒழுங்கமைப்பு, வெளிநாட்டு பரீட்சைகள் கிளை,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2014, யூன் 18.

*இணைப்பு 1*

குறித்த மாவட்டங்களிலே பரீட்சை மண்டபங்கள் ஏற்படுத்தப்படவுள்ள நகரங்களும் நகர இலக்கங்களும் :

**கொழும்பு மாவட்டம் - 1**

| நகரம் | நகர எண் |
|---|---|
| மருதானை | 0101 |
| கொட்டாஞ்சேனை | 0102 |
| பம்பலப்பிட்டி | 0103 |
| நுகேகொடை | 0104 |
| அவிசாவளை | 0105 |
| ஹோமாகம | 0106 |

**கம்பஹா மாவட்டம் - 2**

| நகரம் | நகர எண் |
|---|---|
| கம்பஹா | 0201 |
| நீர்கொழும்பு | 0202 |
| வத்தளை | 0203 |

**களுத்துறை மாவட்டம் - 3**

| நகரம் | நகர எண் |
|---|---|
| களுத்துறை | 0301 |
| மத்துகம | 0302 |
| பாணந்துறை | 0303 |
| அளுத்கம | 0304 |

**காலி மாவட்டம் - 4**

| நகரம் | நகர எண் |
|---|---|
| காலி | 0401 |

**மாத்தறை மாவட்டம் - 5**

| நகரம் | நகர எண் |
|---|---|
| மாத்தறை | 0501 |
| தெனியாய | 0502 |

**ஹம்பந்தோட்டை மாவட்டம் - 6**

| நகரம் | நகர எண் |
|---|---|
| அம்பாந்தோட்டை | 0601 |

**இரத்தினபுரி மாவட்டம் - 7**

| நகரம் | நகர எண் |
|---|---|
| இரத்தினபுரி | 0701 |
| கஹவத்தை | 0702 |
| பலாங்கொடை | 0703 |
| இறக்குவானை | 0704 |

**கேகாலை மாவட்டம் - 8**

| நகரம் | நகர எண் |
|---|---|
| கேகாலை | 0801 |
| எட்டியந்தோட்டை | 0802 |
| வரக்காப்பொல | 0803 |

**குருநாகல் மாவட்டம் - 9**

| நகரம் | நகர எண் |
|---|---|
| குருநாகல் | 0901 |

**புத்தளம் மாவட்டம் - 10**

| நகரம் | நகர எண் |
|---|---|
| புத்தளம் | 1001 |
| சிலாபம் | 1002 |
| உடப்பு | 1003 |

**அநுராதபுரம் மாவட்டம் - 11**

| நகரம் | நகர எண் |
|---|---|
| அநுராதபுரம் | 1101 |

**பொலன்னறுவை மாவட்டம் - 12**

| நகரம் | நகர எண் |
|---|---|
| பொலன்னறுவை | 1201 |
| மன்னம்பிட்டிய | 1202 |

**மாத்தளை மாவட்டம் - 13**

| நகரம் | நகர எண் |
|---|---|
| மாத்தளை | 1301 |
| இரத்தோட்டை | 1302 |

**கண்டி மாவட்டம் - 14**

| நகரம் | நகர எண் |
|---|---|
| கண்டி | 1401 |
| புசல்லாவ | 1402 |
| கலஹா | 1403 |
| கம்பளை | 1404 |
| நாவலப்பிட்டி | 1405 |

**நுவரெலியா மாவட்டம் - 15**

| நகரம் | நகர எண் |
|---|---|
| நுவரெலியா | 1501 |
| ஹற்றன் | 1502 |
| பூண்டுலோயா | 1503 |
| தலவாக்கலை | 1504 |
| மஸ்கெலியா | 1505 |

**பதுளை மாவட்டம் - 16**

| நகரம் | நகர எண் |
|---|---|
| பதுளை | 1601 |
| வெலிமடை | 1602 |
| பண்டாரவளை | 1603 |
| ஹப்புத்தளை | 1604 |
| பசறை | 1605 |

**மொனராகலை மாவட்டம் - 17**

| நகரம் | நகர எண் |
|---|---|
| மொனராகலை | 1701 |

**அம்பாறை மாவட்டம் - 18**

| நகரம் | நகர எண் |
|---|---|
| அம்பாறை | 1801 |
| அக்கரைப்பற்று | 1802 |
| கல்முனை | 1803 |
| திருக்கோவில் | 1804 |
| பொத்துவில் | 1805 |
| சம்மாந்துறை | 1806 |

**மட்டக்களப்பு மாவட்டம் - 19**

| நகரம் | நகர எண் |
|---|---|
| மட்டக்களப்பு | 1901 |
| களுவாஞ்சிக்குடி | 1902 |
| வாழைச்சேனை | 1903 |
| செங்கலடி | 1904 |

**திருகோணமலை மாவட்டம் - 20**

| நகரம் | நகர எண் |
|---|---|
| திருகோணமலை | 2001 |
| மூதூர் | 2002 |

**வவுனியா மாவட்டம் - 21**

| நகரம் | நகர எண் |
|---|---|
| வவுனியா | 2101 |
| ஓமந்தை | 2102 |
| செட்டிக்குளம் | 2103 |

**மன்னார் மாவட்டம் - 22**

| நகரம் | நகர எண் |
|---|---|
| மன்னார் | 2201 |

**முல்லைத்தீவு மாவட்டம் - 23**

| நகரம் | நகர எண் |
|---|---|
| முல்லைத்தீவு | 2301 |
| புதுக்குடியிருப்பு | 2302 |
| ஒட்டுசுட்டான் | 2303 |

**கிளிநொச்சி மாவட்டம் - 24**

| நகரம் | நகர எண் |
|---|---|
| கிளிநொச்சி | 2401 |
| ஸ்கந்தபுரம் | 2402 |
| பூநகரி | 2403 |
| முழங்காவில் | 2404 |
| பளை | 2405 |

**யாழ்ப்பாண மாவட்டம் - 25**

| நகரம் | நகர எண் |
|---|---|
| யாழ்ப்பாணம் | 2501 |
| சாவகச்சேரி | 2502 |
| பருத்தித்துறை | 2503 |
| வேலணை | 2504 |
| நெடுந்தீவு | 2505 |

*இணைப்பு 02*

**அறநெறிப் பாடசாலை இறுதிச் சான்றிதழ் பரீட்சை - இந்து சமய பாடத்திட்டம்**

1. சமய வரலாறு
2. சமய மெய்யியல்
3. சமய இலக்கியம்
4. சமய வாழ்வியல்

**1. சமய வரலாறு**

1. இந்து சமயத்தின் பொதுவான வரலாற்று நோக்கு

1.1 சிந்துவெளி நாகரிகம்
1.2 சனாதன தர்மம்
1.3 வேதகாலம்

1.3.1 வேதகால தெய்வங்களும், வழி பாட்டு முறைகளும்

1.4 இதிகாசங்கள்

1.4.1 வகை
1.4.2 தோன்றக் காரணம்
1.4.3 பகவத் கீதை

1.5 புராணங்கள்

1.5.1 பதினென் புராணவகை – தோன்றக் காரணம்

1.6 தரும சாத்திரங்கள்

2. சைவசமய வரலாறு

2.1 சைவ சமயத்தின் தொன்மை
2.2 சிந்துவெளி நாகரிக காலச் சிவவழிபாடு
2.3 சிவாகமங்களின் தோற்றமும் வழிபாடும்

3. தமிழகத்துச் சைவ சமய வரலாறு

3.1 சங்க இலக்கியத்தில் குறிப்பிடப்படும் தெய்வங்களும் வழிபாட்டு முறைகளும்
3.2 பக்திநெறி

3.2.1 காரைக்காலம்மையார்
3.2.2 சமய குரவர் நால்வர்
3.2.3 ஆலயங்களும், வழிபாடும்

3.3 சாத்திரங்களும் கோத்திரங்களும்

3.3.1 கோயில் கட்டிடங்களின் வளர்ச்சி
3.3.2 திருமுறை, திவ்வியபிரபந்தத் தொகுப்பு
3.3.3 சந்தான குரவர் நால்வர்
3.3.4 மெய்கண்ட சாத்திரங்கள்
3.3.5 பிற்காலத்து தோத்திரப் பாடல்கள்

3.4 சைவ நிறுவனங்கள் : மடங்களும் ஆதீனங்களும்
3.5 ஞானியர் வரலாறு :

திருமூலர்

4. இலங்கையில் சைவம்

4.1 தொன்மை
4.2 புராதன ஆலயங்கள்
(சிறப்பாக) திருக்கேதீச்சரம்
திருக்கோணேச்சரம்
முன்னேச்சரம்
நகுலேச்சரம்
கொக்கட்டிச்சோலை தான்தோன்றீச்சரம்
4.3 பிரதேச ஆலய வரலாறு
(மாணவர் தாம் வாழும் பிரதேசத்தில் உள்ள ஆலயம் பற்றி அறிதல்)

5. இலங்கையில் சைவ மறுமலர்ச்சி

5.1 பெரியார்கள்
5.1.1 ஆறுமுகநாவலர்
5.1.2 விபுலானந்தர்
5.2 சைவம் வளர்த்த நிறுவனங்கள்
5.3 ஞானியர்

**2. சமய மெய்யியல்**

1. வேதங்கள்

1.1 பல தெய்வக் கோட்பாடு
1.2 ஒரு தெய்வக் கோட்பாடு
1.3 வேதப் பிரிவுகள்

2. உபநிடதங்கள்

2.1 மகாவாக்கியங்கள்
2.2 அறக்கோட்பாடு

3. பகவத்கீதை

3.1 நால்வகை யோகம்

4. மூவகை வேதாந்தங்கள்

4.1 அத்துவைதம்
4.2 விசிட்டாத்வைதம்
4.3 துவைதம்
(இவற்றை அறிமுகப்படுத்தினால் போதும்)

5. சைவ சித்தாந்தம்

5.1 மெய்கண்ட சாத்திரங்கள் (14) அறிமுகம்
5.2 சற்கரிய வாதம்
5.3 முப்பொருள் (பதி, பசு, பாசம்)
5.4 சைவநாற்பாதங்கள் (சரியை, கிரியை, யோகம், ஞானம்)
5.5 குரு, லிங்க, சங்கம வழிபாடு
5.6 சிவசின்னங்கள்
5.7 தீட்சை

6. திருவருட்பயன் - 10 அதிகாரம்

**3. சமய இலக்கியம்**

1. திருமுறைப் பாடல்கள்
(மனனம், பொழிப்பு, சந்தர்ப்பம்)

1.1 திருஞானசம்பந்தர் தேவாரம்
(அ) “வேயுறு தோளி பங்கன்................”
(பதிகம் முழுவதும்)
1.2 அப்பர் தேவாரம்
(அ) “மாதர் பிறை கண்ணியானை .......”
(பதிகம் முழுவதும்)
1.3 சுந்தரர் தேவாரம்
(அ) திருக்கேதீச்சரத் திருப்பதிகம்
“நத்தார் படை ............................”
(பதிகம் முழுவதும்)
1.4 மாணிக்கவாசகர் - திருவாசகம்
(அ) திருவெம்பாவை (முழுவதும்)
(ஆ) சிவபுராணம்
1.5 திருவிசைப்பா
(அ) “அற்புதத் தெய்வம் .....................”
(ஆ) “கற்றவர் விழுங்கும் .....................”
1.6 திருப்பல்லாண்டு
(அ) “சீரும் திருவம் பொலிய .................”
(ஆ) “ஆரார் வந்தார் அமரர் குழாத்தில் .........”
(இ) “மிண்டு மனத்தவர் .................”
1.7 திருப்புராணம்
(அ) “ஐந்து பேரறிவும் ......................”
(ஆ) “தெண்ணிலா மலர்ந்த வேணியாய் உந்தன் .................”
(இ) “அண்ணலார் தமக்கீடு ...............”
1.8 திருமந்திரம்
(அ) “அன்பும் சிவமும் ......................”
(ஆ) “உள்ளம் பெருங்கோயில் ...........”
(இ) “யாவர்க்குமாம் ...........................”
1.9 இரண்டாம் திருமுறை
மூத்தநாயனார் திருவிரட்டை மணிமாலை – கபிலதேவநாயனார்
“திருவாக்குஞ் செய்கருமங் கைகூட்டும் செஞ்சொற் ....................”
காரைக்காலம்மையார் அருளிச் செய்த அற்புதத் திருவந்தாதி
“கண்ணாரக் கண்டும் என் கையாரக் கூப்பியும் ...................”

2. ஏனைய தோத்திரப் பாடல்கள்
2.1 திருப்புகழ் - அருணகிரிநாதர்
(அ) “எதிரிலாத பக்தி .......................”
(ஆ) “பக்தியால் யானுனை ..............”

2.2 அபிராமி அந்தாதி – அபிராமிப்பட்டர்
(அ) “நின்றும் இருந்தும் கிடந்தும் .......”
(ஆ) “சித்தியும் சித்தி தரும் தெய்வமுமாகி ..................”
(இ) “கண் களிக்கும்படி கண்டு கொண்டேன் ..............”

2.3 பராபரக்கண்ணி – தாயுமானவர்
(அ) “கொல்லா விரதம் குவலயம் எல்லாம் ஓங்க .............”
(ஆ) “மூர்த்தி தலம் தீர்த்தம் முறையால் தொடங்கினர்க்கு ..............”
(இ) “விரும்பு சரியை முதல் மெய்ஞானம் நான்கும் ...........”
(ஈ) “சினம் இறக்கக் கற்றாலும் சித்தி எல்லாம் பெற்றாலும் ............”
(உ) “எல்லாரும் இன்புற்று இருக்க நினைப்பதுவே ................”

3. திவ்விய பிரபந்தங்கள்
திருப்பாவை :– ஆண்டாள்

(அ) “மாரிமழை முழைஞ்சல் முன்னிக் கிடத்துறங்கும்............”
(ஆ) அன்றிவ்வுலக மறந்தாயடி போற்றி ......”
(இ) “மாலே மணிவண்ணா மார்கழி நீராடுவான் ............”

4. கந்தபுராணம்
கந்தவிரதப் பாடல்கள் - 20
(தெரிவுசெய்யப்பட்டவை) – பாடல் ஒன்று முதல் இருபது வரை

5. பெரிய புராணம்
கண்ணப்பநாயனார் புராணம் - பாடல் 815 முதல் 835 வரை

6. திருவிளையாடற் புராணம் - பரம்சோதி முனிவர்
(அ) கால்மாறியாடின படலம் - 1475 பாடல் முதல் 1489 பாடல் வரை

7. நீதிப்பாடல்கள்
திருக்குறள் - திருவள்ளுவர்

(அ) அறன்வலியுறுத்தல் - 4 ஆம் அதிகாரம்
(ஆ) இல் வாழ்க்கை – 5 ஆம் அதிகாரம்
(இ) அடக்கமுடைமை – 13 ஆம் அதிகாரம்
(ஈ) ஒழுக்கமுடைமை – 14 ஆம் அதிகாரம்
(உ) நட்பு 79 ஆம் அதிகாரம்

4. **சமய வாழ்வியல்**

1. ஆலய வழிபாடும் இறை நம்பிக்கையும்

   1.1 திருக்கோயில் அமைப்பு
   1.2 திருக்கோயில் வழிபாடு
   1.3 நித்திய, நைமித்திய கிரியைகள்
   1.4 இறை நம்பிக்கை (பக்தி அனுபவங்கள்)

2. வீட்டில் வழிபாடு

   2.1 நித்திய வழிபாடு (காலை, மாலை வழிபாடு)

   2.2 விசேட வழிபாடு

   (அ) கூட்டு வழிபாடு
   (ஆ) தியானம்
   (இ) செபம்

   2.3 அகப்புறத் தூய்மை

3. விரதங்களும் பண்டிகைகளும்
   3.1 விரதங்கள்
   (அ) சிவராத்திரி
   நவராத்திரி
   விநாயகர் சதுர்த்தி
   கந்தசஷ்டி
   விநாயகர் சஷ்டி
   திருவாதிரை
   பிரதோஷம்
   வைகுண்ட ஏகாதசி

   (ஆ) அமாவாசை, பூரணை விரதங்கள்

   3.2 பண்டிகைகள்
   3.2.1 தைப்பொங்கல்
   3.2.2 சித்திரை வருடப் பிறப்பு
   3.2.3 ஆடிப்பிறப்பு
   3.2.4 தீபாவளி
   3.2.5 கார்த்திகை விளக்கு

4. அபரக் கிரியைகள்

   4.1 பொது விளக்கீடு
   4.2 மரணக் கிரியைகள்
   4.3 சபிண்டீகரணம்
   4.4 சிரார்த்தம்

5. சமய, ஆன்மீக விழுமியங்கள்

   5.1 பெற்றோர், மூத்தோர், பெரியோர், குரு ஆகியோரைக் கனம் பண்ணல்
   5.2 நற்குடி மக்களாக வாழ்வதற்கு உதவும் நெறிமுறைப் பண்புகளை வாழ்வில் கடைப்பிடித்தல்
   5.3 அன்பு, உண்மை, கருணை, இன்னா செய்யாமை, பிறர் நலம் பேணல், கூடிவாழும் பண்பு, நீதி, கடமையுணர்வு முதலிய மனித விழுமியங்களைப் பேணல், இவற்றை அறிந்து கொள்ளல்.

6. சமய வாழ்வுடன் கலைகள்-

   இசை
   நடனம்
   கட்டடம்
   சாத்துப்படி
   மாலை கட்டுதல்
   பண்ணிசை
   சிற்பம்
   ஓவியம்
   சுவாமிக்கு அலங்காரம் செய்தல்
   கோலம் போடுதல்

7-105

---

## இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

கத்தோலிக்க மறைப் பாடசாலை இறுதிச் சான்றிதழ்
பரீட்சை – 2013

**சட்ட விதிமுறைகள்**.- கத்தோலிக்க மறைப் பாடசாலை இறுதிச் சான்றிதழ் பரீட்சையானது, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் 2014 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் இதற்கென அமைக்கப்படும் பரீட்சை நிலையங்களில் நடாத்தப்படும்.

2. **பரீட்சை நிலையம்**.- நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் விண்ணப்பதாரரின் எண்ணிக்கைக்கேற்ப பரீட்சை நிலையங்களில் அமைக்கப்படும். இருப்பினும் குறிப்பிட்ட ஒரு பரீட்சை நிலையத்தில் போதியளவு விண்ணப்பதாரர்கள் இல்லாவிடின் அப்பரீட்சை நிலையம் இரத்துச் செய்யப்பட்டு, அதற்குரிய விண்ணப்பதாரர்கள் அதற்கு அண்மையிலுள்ள பரீட்சை நிலையத்தில் மேற்படி பரீட்சைக்கு அனுமதிக்கப்படுவர். பரீட்சை நிலையங்கள் நிறுவப்படும் மாவட்டங்கள் மற்றும் நகரங்களடங்கிய பட்டியல் இணைப்பு I இல் தரப்பட்டுள்ளன.

3. **ஊடக மொழி**.- இப்பரீட்சை சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய இரு மொழிகளில் மாத்திரம் நடைபெறும்.

4. **தகுதி**.- இப்பரீட்சைக்கு விண்ணப்பிப்போர் கீழ்வருவனவற்றில் ஏதேனும் ஒரு தகைமையைப் பெற்றிருக்க வேண்டும் :-

   4.1 மறைப் பாடசாலையொன்றில் பத்தாம் தரத்தில் சித்திபெற்று மறைப் பாடசாலையின் இறுதி நற்சான்றுப்பத்திர வகுப்பில் ஒரு வருடம் கல்வி பயின்றிருத்தல் ; அல்லது

   4.2 தேசிய பொதுக்கல்வி நற்சான்றுப்பத்திர வகுப்பில் (சாதாரண தரம்) பரீட்சையில் அல்லது கல்வி பொதுத் தராதரப்பத்திர (சாதாரண தரம்) பரீட்சையில் கத்தோலிக்க மறை (கிறிஸ்தவ மறை றோ. க.) பாடத்தில் சித்திபெற்றிருத்தல். அல்லது சிரேட்ட பாடசாலை சான்றுப்பத்திர பரீட்சையில் கத்தோலிக்க மறை (கிறிஸ்தவ மறை றோ. க.) பாடத்தில் சித்திபெற்றிருத்தல்.

4.3 அந்தந்த மறை மாவட்டத்தில் நடைபெறும் வருடாந்த மறைக்கல்வி பரீட்சையில் பதினோராந்தர வகுப்பில் சித்திபெற்றிருத்தல்

**குறிப்பு**.- (i) இப்பரீட்சையில் தோற்றும் விண்ணப்பதாரர்கள் மேலே பந்தி 4 இல் கேட்கப்பட்டுள்ளதற்கேற்ப தகுதி பெற்றுள்ளார்கள் என்பதை மறைக்கல்வி பாடசாலைப் பொறுப்பாசிரியர் அல்லது பங்குக் குருவானவர் உறுதிப்படுத்தல் வேண்டும்.

(ii) விண்ணப்பதாரர் மறைப் பாடசாலை விண்ணப்பதாரராக மட்டுமே இப்பரீட்சைக்குத் தோற்ற முடியும்.

5. **விண்ணப்பித்தல்** :

5.1 கத்தோலிக்க மறைப் பாடசாலை இறுதிச் சான்றிதழ் பரீட்சைக்காக பரீட்சைத் திணைக்களத்தில் பதிவுசெய்யப் பட்டுள்ள அனைத்து மறைப் பாடசாலைகளுக்கும் தேவையான விண்ணப்பப்படிவங்கள், அறிவுறுத்தல் பத்திரங்கள் உரிய காலத்தில் வழங்கப்படும். குறிப்பிட்ட காலத்திற்குள் கிடைக்காவிட்டால் மறைப் பாடசாலையின் பெயர், முகவரி, விண்ணப்பதாரரின் எண்ணிக்கை ஆகிய விபரங்களை உள்ளடக்கிய கடிதம் மூலம் இவ்வறிவித்தலின் 5:6 இல் குறிப்பிட்டுள்ள முகவரிக்கு 2014.07.15 ஆந் திகதிக்கு முன் அறிவித்து விண்ணப்பப்படிவங்களை பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

5.2 விண்ணப்பதாரர் தனிப்பட்ட விண்ணப்பதாரராக பரீட்சைக் குத் தோற்ற அனுமதிக்கப்படமாட்டார். ஆயினும், அறிவுறுத்தல் 4 இல் கேட்கப்பட்டுள்ள தகுதியிருப்பின் தமது வதிவிடத்துக்கண்மையிலுள்ள மறைப் பாடசாலையின் ஊடாக பரீட்சைக் கட்டணமாக 150 ரூபா செலுத்தி பரீட்சைக்குத் தோற்றி விண்ணப்பிக்கலாம். இதற்குத் தேவையான அறிவுறுத்தல்கள் சகல மறைப் பாடசாலைகளின் தலைவர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

5.3 மறைப் பாடசாலைப் பொறுப்பாசிரியரினால் முன்வைக்கப் படும் இவ்விண்ணப்பங்களின் இரண்டு பிரதிகள் தயாரிக்கப் பட்டு முதல் பிரதி பரீட்சை ஆணையாளர் நாயகத்துக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும். மற்றைய பிரதி மறைப் பாடசாலை பொறுப்பாசிரியர் வசம் வைத்திருத்தல் வேண்டும். இவ்விண்ணப்பப்படிவம் இரண்டிலும் மறைப் பாடசாலை பொறுப்பாசிரியர் கையொப்பமிட்டிருக்க வேண்டும்.

5.4 விண்ணப்பங்கள் யாவும் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் 2014.08.04 ஆந் திகதி ஆகும்.

5.5 விண்ணப்பங்கள் தெளிவாகவும், பிழையின்றியும் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படாத விண்ணப்பங்களும், விண்ணப்பங்கள் அனுப்புவதற்கு நாம் குறிப்பிட்ட கடைசித் திகதிக்குப் பின் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

5.6 மறைப் பாடசாலையின் கணினி இலக்கத்தையும், முகவரி யையும் சரியாகக் குறிப்பிடப்பட்டிருப்பதோடு முகவரி மாற்றப்பட்டிருப்பின் அதை எமக்கு அறிவிக்க வேண்டும். தொலைபேசி வசதியிருப்பின் அதன் இலக்கத்தையும் குறிப்பிடுக. நிரப்பப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் பதிவுத் தபாலில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பி வைக்கவும். விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றி அறிவிக்கப் படமாட்டாது :

பரீட்சை ஆணையாளர் நாயகம்,
இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
ஒழுங்கமைப்பு, வெளிநாட்டு பரீட்சைகள் கிளை,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

விண்ணப்பங்கள் அனுப்பப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "கத்தோலிக்க மறைப் பாடசாலை இறுதிப் பரீட்சை – 2013" என்பதையும் விண்ணப்பிக்கும் நகரத்தையும் குறிப்பிட வேண்டும். விண்ணப்பத்துடன் வேறெந்த சான்றிதழையும் இணைக்கத் தேவையில்லை.

5.7 விண்ணப்பதாரியின் சான்றிதழ் பற்றிய தகுதியை மறைப் பாடசாலை பொறுப்பாசிரியர் அல்லது பங்குத் தந்தை அத்தாட்சிப்படுத்த வேண்டும்.

6. ***பரீட்சைக் கட்டணம்***.- இப்பரீட்சைக்கான கட்டணம் 150 ரூபாவாகும். இருப்பினும், முதன் முதலில் தோற்றும் விண்ணப்பதாரர் இப்பரீட்சைக்கான கட்டணத்தைச் செலுத்த தேவையில்லை. நூன சித்தியைப் பூர்த்திசெய்ய வேண்டிய பாடத்திற்கான கட்டணம் 50 ரூபா ஆகும்.

6.1 *பரீட்சைக் கட்டணம் செலுத்தல்*.- விண்ணப்பதாரர் அனைவரினதும் பரீட்சைக் கட்டணத்தை பொறுப்பாசிரியர் ஒன்று சேர்த்து இலங்கையில் ஏதாவதொரு தபால் அலுவலகத்தில் செலுத்தி பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொண்டு, அப்பற்றுச்சீட்டை விண்ணப்பப்பத்திரத்தின் பின்னால் ஒட்டி அனுப்ப வேண்டும். பற்றுச்சீட்டின் பிரதியொன்றை நீங்களும் வைத்திருப்பது நன்று (முத்திரை, காசுக்கட்டளை போன்றவை ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது).

6.2 *பரீட்சைக் கட்டணம் மீளப்பெறல்*.- எக்காரணம் கொண்டும் இப்பரீட்சைக்காக செலுத்தப்படும் கட்டணம் வேறு பரீட்சைகளுக்கு மாற்றப்படவோ, மீளச் செலுத்தப்படவோ மாட்டாது.

7. **அனுமதிப்பத்திரம்**.- பரீட்சைக்கு விண்ணப்பித்துள்ள அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால், விண்ணப்பித்த மறைப் பாடசாலை பொறுப்பாசிரியரூடாக அனுமதிப்பத்திரம் அனுப்பப்படும்.

7.1 இப்பரீட்சைக்குத் தோற்றும் அனைத்துப் பரீட்சார்த்திகளும் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தேசிய அடையாள அட்டையை அல்லது ஏற்றுக்கொள்ளக்கூடிய வேறு அத்தாட்சிப்பத்திரத்தை முன்வைக்க வேண்டும்.

பரீட்சைக்குத் தோற்றும் அனைத்துப் பரீட்சார்த்திகளும் தமது அனுமதிப்பத்திரத்தில் தமது கையொப்பத்தை சான்றுப்படுத்தி பரீட்சைக்குத் தோற்றும் முதல் நாளிலேயே பரீட்சை நிலைய மேற்பார்வையாளரிடம் கையளிக்க வேண்டும். பரீட்சார்த்தி ஒருவர் தமது அனுமதிப்பத்திரத்தைக் கொடுக்காவிட்டால் அல்லது பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் தமக்கு அளிக்கப்பட்ட பரீட்சை நிலையத்தை விட்டு வேறொரு பரீட்சை நிலையத்தில் பரீட்சைக்குத் தோற்றியிருந்தால் அவரது பரீட்சார்த்தித் தகவு இரத்துச் செய்யப்படும்.

7.2 அனுமதிப்பத்திரத்திலுள்ள கையொப்பம் மறைப் பாடசாலையின் பொறுப்பாசிரியரினால் அல்லது பங்குத் தந்தையினால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

7.3 பரீட்சை நடைபெறுவதற்கு 7 நாட்களுக்கு முன் அனுமதிப் பத்திரம் கிடைக்காவிடின் அந்த மறைப்பாடசாலை பொறுப் பாசிரியரினூடாக பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு அறிவிக்க வேண்டும். அவ்வாறான சந்தர்ப்பங்களில் கீழ்க்குறிப்பிட்ட விபரங்களை அறிவிக்க வேண்டும் :-

(1) பரீட்சையின் பெயர் ;
(2) மறைப் பாடசாலையின் பெயர் ;
(3) மறைப் பாடசாலைக்கு வழங்கப்பட்டுள்ள கணினி இலக்கம் ;
(4) முழுப் பெயரும் முகவரியும் ;
(5) விண்ணப்பித்த பரீட்சை நிலையம் ;
(6) விண்ணப்பப்பத்திரம் தபாலிடப்பட்ட தபாற்கந்தோர் ;
(7) விண்ணப்பம் பதிவுசெய்யப்பட்ட பதிவு எண்ணும் திகதியும் ;
(8) பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டிருப்பின் அந்தப் பற்றுச்சீட்டு இலக்கம், திகதி, தபால் அலுவலகம்.

8. ஆள் **அடையாளம்**.- ஒவ்வொரு வினாத்தாளுக்கும் தோற்றும் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் மண்டப மேற்பார்வையாளர் ஏற்றுக்கொள்ளும் விதத்தில் பரீட்சார்த்திகள் தம்மை அடையாளப் படுத்தும் ஆவணத்தைச் சமர்ப்பிக்க ஆயத்தமாக இருக்க வேண்டும். அதற்காக பின்வருவனவற்றில் ஒன்றைப் பயன்படுத்தலாம் :-

8.1 தேசிய ஆள் அடையாள அட்டை ;
8.2 செல்லுபடியாகும் கடவுச்சீட்டு ;
8.3 தபால் ஆள் அடையாள அட்டை.

9. **சித்திபெற்றமையைத் தீர்மானித்தலும், பெறுபேற்றை வெளியிடலும்**.- இத்தேர்வுக்கான வினாத்தாள்களின் எண்ணிக்கை நான்கு ஆகும். பரீட்சையில் சித்திபெறுவதற்கு பரீட்சார்த்தி நான்கு வினாத்தாள்களிலும் சித்திபெற வேண்டும். ஆயினும் இந்நான்கினுள் ஏதேனும் ஒரு பாடத்தில் மாத்திரம் சித்திபெறாவிடின் அது நூன சித்தியாகக் கருதப்படும். பரீட்சைக்குத் தோற்றிய வருடத்திலிருந்து தொடர்ந்து முன்வரும் இரண்டு (02) வருடங்களுக்குள் அந்நூன சித்திபெற்ற பாடத்திற்கு மீண்டும் தோற்றி அதில் சித்திபெற வேண்டும். (இது 2012 ஆம் ஆண்டு நடைபெறும் பரீட்சையிலிருந்து நடைமுறைப் படுத்தப்படுகிறது.) நூன சித்தி பெறும் மாணவர்கள் அதனைப் பூர்த்திசெய்யும்போது அப்பாடத்திற்கு மட்டுமே தோற்ற வேண்டும்.

9.1 சகல பாடங்களுக்கும் ஒவ்வொரு வினாத்தாளுக்கும் 100 புள்ளிகள் வழங்கப்படுவதுடன் சித்தி பெறும் தரங்களுக்குரிய புள்ளி இடைவெளி மற்றும் குறியீடு கீழே தரப்பட்டுள்ளது :

| ஆயிடை | தரம் | குறியீடு |
|---|---|---|
| 0-34 | சித்தியின்மை | F |
| 35-54 | சித்தி | S |
| 55-69 | திறமைச் சித்தி | C |
| 70-100 | விசேட சித்தி | D |

9.2 பரீட்சார்த்திகளின் பெறுபேற்று அட்டவணை அந்தந்த மறைப் பாடசாலைப் பொறுப்பாளருக்கு தபால் மூலம் அனுப்பப்படும்.

10. **சான்றிதழ் பத்திரம்**.- இத்தேர்வில் சித்திபெற்ற அனைத்துப் பரீட்சார்த்திகளுக்கும் பரீட்சைத் திணைக்களத்தினால் சான்றிதழ் வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

11. **விடைத்தாள் மீள் பரிசீலனை.- மறைப் பாடசாலை பொறுப்பாசிரியரின் வேண்டுகோளின்படி மாத்திரம்** விடைத் தாள்கள் பரிசீலனை செய்யப்படும். இத்திணைக்களத்தினால் வெளியிடப்படும் படிவத்தில் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியிடப்பட்டு 30 நாட்களுக்குள் மீள் பரிசீலனைக்கு விண்ணப்பிக்கலாம். இதற்காக அறவிடப்படும் கட்டணத் தொகை பற்றி அவ்வப்போது மாற்றம் செய்ய இடமுண்டு. அதுபற்றி விண்ணப்பதாரிக்கு அறிவிக்கப்படும். ஏற்கனவே வெளியிடப்பட்ட பெறுபேற்றில் ஏதும் மாற்றம் ஏற்பட்டால் மட்டுமே இப்பணம் மீளத்தரப்படும். எக்காரணத்தைக் கொண்டும் விண்ணப்ப தாரருக்கோ அவரது பிரதிநிதிக்கோ விடைத்தாள்களைப் பரிசீலிக்க அனுமதி வழங்கப்பட மாட்டாது.

12. இச்சட்டதிட்டங்களுக்கும், பாடத்திட்டத்தில் காட்டப்பட்டுள்ள ஒழுங்கு முறைகளுக்கு ஏற்ப செயற்படுவதற்கு அனைத்து விண்ணப்ப தாரரும் கட்டுப்பட்டு இருப்பதோடு இந்த ஒழுங்குமுறைகளைக் கடைப்பிடிக்காதோர் பற்றிய விடயத்தில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் எடுக்கப்படும் முடிவே இறுதியானதும் ஆகும்.

டபிள்யூ. எம். என். ஜே. புஷ்பகுமார,
பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2014, யூன் 17.

## கத்தோலிக்க மறை

(2007 இல் இருந்து நடாத்தப்படும் பரீட்சைக்கான பாடத்திட்டம்)

*இத்தேர்வு ஒவ்வொரு வினாத்தாள்களும் மூன்று மணித்தியாலங்களைக் கொண்ட 4 வினாத்தாள்களை உள்ளடக்கியது.*

### *வினாத்தாள் I*

கத்தோலிக்க விசுவாசம்

(அ) இவ்வினாத்தாள் திருத்தூதர்களின் விசுவாச அறிக்கையின் ஆரம்ப கற்பித்தலை அடித்தளமாகக் கொண்டுள்ளது :

* படைத்தவர்
  - உலக ஆரம்பம்
  - படைப்பின் அழகு
  - படைப்பைப் பாதுகாத்தல் (தொ. நூ. 1, 2, 3)

* மீட்பர்
  - இயேசுக்கிறிஸ்து (யோவான் 1 : 1-14)
  - இறையரசு பற்றிய படிப்பினை (மத்தேயு 5, 6, 7)
  - உவமைகள் (மத்தேயு 13 : 1-52)
  - புதுமைகள் (யோவான் 11 : 38-45, லூக்கா 8 : 26-39, மாற்கு 2 : 1-12 மற்றும் 4 : 35-41)

* தூய ஆவியானவர்
  - செயற்பாடுகள் (யோவான் 7 : 37-39, 14 : 15-31, 16 : 5-15, 1 கொரிந்தியர் 12 : 4-11)

* கத்தோலிக்க திருச்சபை
  - ஏகம், பரிசுத்தம், கத்தோலிக்கம், அப்போஸ்தலிக்கம்
  - திருச்சபை கிறிஸ்துவின் சரீரமாக
    * உரோமையர் 12 : 4-21
    * 1 கொரிந்தியர் 12 : 12-31
  - திருச்சபையின் ஆட்சித்திட்டம்
  - அங்கீகரிக்கப்பட்ட அதிகாரம்கொண்ட பணி
  - துறவற பணி
  - பொதுநிலையினர் பணி

* மனித வாழ்வின் மாற்றம்
  - மனிதனின் இறுதி நிகழ்வு
  - புதிய வானமும் புதிய பூமியும் (திருவெளிப்பாடு 21 : 1-4)

**வினாத்தாள் II**

கத்தோலிக்க வாழ்வுக்கான வழி

(ஆ) கத்தோலிக்க வாழ்வுக்கு வலிமை தரும் திருவழிபாடு

* திருப்பலியும் திருப்பலிச் சடங்கும்
* பாஸ்கா மறைபொருள்
* இறையருள்
* திருவருட்சாதனங்கள் (பொதுவான பண்பு)

  * தொடக்க திருவருட் சாதனங்கள் :

  * திருமுழுக்கு
  * உறுதிப்பூசுதல்
  * திவ்விய நற்கருணை

  * சுகத்தை வழங்கும் திருவருட்சாதனங்கள் :

    * ஒப்புரவு
    * நோயிற்பூசுதல்

  * பணிக்காக ஏற்படுத்தப்பட்ட திருவருட்சாதனங்கள் :

    * குருத்துவம்
    * மெய்விவாகம்

**வினாத்தாள் III**

கத்தோலிக்க நல்லொழுக்க வாழ்வு

(இ) கத்தோலிக்க நல்லொழுக்கம்

* பத்துக் கட்டளைகளும் அன்பின் கட்டளைகளும் - இரு பக்கங்கள்
* பத்துக் கட்டளைகளை நிறைவாக்கிய இயேசுக்கிறிஸ்து (மத்தேயு 5 : 21-47)
* சமவெளிப் பொழிவு (மலைப்பொழிவு) (லூக்கா 6 : 17-49)
* அறிவு, சுதந்திரமான விருப்பு, உணர்வுகள்
* இறை உறவின் பண்புகள்
* மனச்சாட்சி
* இறைவனை அன்பு செய்தல் (1-3 கட்டளைகள்)
* அயலவரை அன்பு செய்தல் (4-10 கட்டளைகள்)
* பத்துக் கட்டளைகளில் தோன்றவேண்டிய நற்பழக்கங்கள்
* கத்தோலிக்க தனித்துவ அடையாளம்

**வினாத்தாள் IV**

செப வாழ்வு

(ஈ) இறையுறவை வளர்க்கும் செபம்

* பழைய ஏற்பாட்டில் செபம்
  * ஆபிரகாம்
  * மோசே

* புதிய ஏற்பாட்டில் செபம்
  * கிறிஸ்து செபித்த விசேட சந்தர்ப்பங்கள்
  * செபம் தொடர்பான விசேட படிப்பினைகள் (லூக்கா 11 : 1-13)

* திருச்சபை வாழ்வில் செபம்
  * புகழ்தல்
  * நன்றி கூறல்
  * வேண்டுதல்
  * பரிந்துரை செபங்கள்
  * தியானத்தின் மூலம் செபித்தல்

* கிறிஸ்து கற்பித்த செபத்தில் (பரலோக மந்திரம்) வேண்டுதல்கள் ஏழு
  * உம்முடைய நாமம் அர்ச்சிக்கப்படுவதாக
  * உம்முடைய அரசு வருக
  * உமது சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவது போல பூவுலகிலும் செய்யப்படுவதாக
  * எங்கள் அனுதின உணவை எங்களுக்கு அன்றாடம் அளித்தருளும்
  * எங்களுக்குத் தீமை செய்கின்றவர்களை நாங்கள் பொறுப்பதுபோல் எங்கள் பாவங்களைப் பொறுத்தருளும்
  * சோதனையில் எங்களை விழ விடாதேயும்
  * தீமையில் இருந்து எங்களை இரட்சித்தருளும்

* பல்வித பக்தி முயற்சிகள்
  * செபமாலை
  * நவநாட்கள்
  * திருமணித்தியாலம்

பயன்படுத்தக்கூடிய நூல்கள்

- புதிய கத்தோலிக்க திருமறை
- பெரிய குறிப்படம்
- திருவிவிலியம் (குறிப்பிட்ட பகுதிகள்)
- இரண்டாம் வத்திக்கான் சங்க,
  * திருவழிபாடு
  * இன்றைய உலகில் திருச்சபை
  * கிறிஸ்துவின் திருச்சபை
  * பொதுநிலையினரின் திருப்பணி

பற்றிய ஏடுகள்.

*அட்டவணை - 1*

*மாவட்டங்களில் பரீட்சை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ள நகரங்களும் நகர எண்களும்*

**மாவட்டம் 01 - கொழும்பு**

| *நகரம்* | *நகர எண்* |
|---|---|
| பொரளை | 101 |
| களுஅக்கலை | 102 |
| பன்னிப்பிட்டி | 103 |
| மொறட்டுவை | 104 |

**மாவட்டம் 02 - கம்பஹா**

| *நகரம்* | *நகர எண்* |
|---|---|
| நீர்கொழும்பு | 205 |
| கந்தானை | 206 |
| கம்பஹா | 207 |
| றாகம | 208 |

**மாவட்டம் 03 - களுத்துறை**

| *நகரம்* | *நகர எண்* |
|---|---|
| களுத்துறை | 309 |

**மாவட்டம் 04 - காலி**

| *நகரம்* | *நகர எண்* |
|---|---|
| காலி | 410 |

**மாவட்டம் 05 - மாத்தறை**

| *நகரம்* | *நகர எண்* |
|---|---|
| மாத்தறை | 511 |

**மாவட்டம் 06 - அம்பாந்தோட்டை**

| *நகரம்* | *நகர எண்* |
|---|---|
| அம்பாந்தோட்டை | 612 |

**மாவட்டம் 07 - இரத்தினபுரி**

| *நகரம்* | *நகர எண்* |
|---|---|
| இரத்தினபுரி | 713 |

**மாவட்டம் 08 - கேகாலை**

| *நகரம்* | *நகர எண்* |
|---|---|
| கேகாலை | 814 |

**மாவட்டம் 09 - புத்தளம்**

| *நகரம்* | *நகர எண்* |
|---|---|
| புத்தளம் | 915 |
| சிலாபம் | 916 |
| வென்னப்புவ | 917 |

**மாவட்டம் 10 - குருநாகல்**

| *நகரம்* | *நகர எண்* |
|---|---|
| குருநாகல் | 1018 |
| குளியாப்பிட்டி | 1019 |
| நிக்கவரட்டி | 1020 |

**மாவட்டம் 11 - கண்டி**

| *நகரம்* | *நகர எண்* |
|---|---|
| கண்டி | 1121 |

**மாவட்டம் 12 - மாத்தளை**

| *நகரம்* | *நகர எண்* |
|---|---|
| மாத்தளை | 1222 |

**மாவட்டம் 13 - நுவரெலியா**

| *நகரம்* | *நகர எண்* |
|---|---|
| தலவாக்கலை | 1323 |

**மாவட்டம் 14 - பதுளை**

| *நகரம்* | *நகர எண்* |
|---|---|
| பதுளை | 1424 |

**மாவட்டம் 15 - மொணறாகலை**

| *நகரம்* | *நகர எண்* |
|---|---|
| மொணறாகலை | 1525 |

**மாவட்டம் 16 - அநுராதபுரம்**

| *நகரம்* | *நகர எண்* |
|---|---|
| அநுராதபுரம் | 1626 |

**மாவட்டம் 17 - பொலன்னறுவை**

| *நகரம்* | *நகர எண்* |
|---|---|
| ஹிங்குராக்கொடை | 1727 |

**மாவட்டம் 18 - திருகோணமலை**

| *நகரம்* | *நகர எண்* |
|---|---|
| திருகோணமலை | 1828 |

**மாவட்டம் 19 - மட்டக்களப்பு**

| நகரம் | நகர எண் |
|---|---|
| மட்டக்களப்பு | 1929 |

**மாவட்டம் 20 - அம்பாறை**

| நகரம் | நகர எண் |
|---|---|
| அம்பாறை | 2030 |
| கல்முனை | 2031 |

**மாவட்டம் 21 - யாழ்ப்பாணம்**

| நகரம் | நகர எண் |
|---|---|
| யாழ்ப்பாணம் | 2132 |
| மானிப்பாய் | 2133 |
| பருத்தித்துறை | 2134 |
| நெடுந்தீவு | 2135 |

**மாவட்டம் 22 - முல்லைத்தீவு**

| நகரம் | நகர எண் |
|---|---|
| கிளிநொச்சி | 2236 |
| முல்லைத்தீவு | 2237 |
| முழங்காவில் | 2238 |

**மாவட்டம் 23 - மன்னார்**

| நகரம் | நகர எண் |
|---|---|
| மன்னார் | 2339 |
| முருங்கன் | 2340 |
| ஆண்டாங்குளம் | 2341 |
| பெரிய பண்டிவிரிச்சான் | 2342 |

**மாவட்டம் 24 - வவுனியா**

| நகரம் | நகர எண் |
|---|---|
| வவுனியா | 2443 |

7-72

---

**சுகாதார அமைச்சு**

இலங்கை தொழில்நுட்பவியலாளர் சேவையில் மருந்துக்கலவை உத்தியோகத்தர் பதவிக்காக (திறந்த அடிப்படை) பயிற்சி நெறிக்கு மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளல் - 2014

சுகாதார அமைச்சின்கீழ் மருந்துக் கலவை உத்தியோகத்தர் பயிற்சி நெறிக்கு மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதற்கு கீழ்க்குறிக்கப்படும் தகுதிகளையுடைய விண்ணப்பதாரிகளிடமிருந்து 2014.08.08 ஆந் திகதிவரை விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

சுகாதார அமைச்சினால் நடாத்தப்படும் திறந்த போட்டிப் பரீட்சை திறமை அடிப்படையில் பயிற்சிக்கு தகுதிவாய்ந்தவர்கள் தெரிவுசெய்யப்படுவார்கள்.

**2. கல்வித் தகைமைகள்.**- (அ) சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி, கணிதம், விஞ்ஞானம் உள்ளடங்கலாக இன்னுமொரு பாடத்தில் திறமைச் சித்தியுடன் 6 பாடங்களில் க. பொ. த. (சாதாரணம்) பரீட்சையில் ஒரு அமர்வில் சித்தியடைந்திருத்தல் ;

அத்துடன்

(ஆ) இரசாயனவியல் உள்ளடங்கலாக விஞ்ஞானப் பிரிவில் 3 பாடங்களில் க. பொ. த. (உயர் தரப்) பரீட்சையில் ஒரு அமர்வில் சித்தியடைந்திருத்தல்.

3. எதிர்பார்க்கப்படும் தகுதிகளையுடைய விண்ணப்பதாரிகளுக்கு போட்டிப் பரீட்சை நடாத்தப்பெற்று அதில் கூடிய புள்ளிகள் பெறும் விண்ணப்பதாரிகளுக்கு நேர்முகப் பரீட்சை நடாத்தப்பெற்று பயிற்சிக்காகத் தெரிவுசெய்யப்படுவார்கள். பயிற்சிநெறியினைப் பூர்த்திசெய்த பயிலுநர்கள் மத்திய அமைச்சு மற்றும் மாகாண சபைகளுக்குரிய வைத்தியசாலைகள், நிறுவனங்கள் ஆகியவற்றில் உள்ள வெற்றிடங்களின் அடிப்படையில் தெரிவுசெய்யப்படுவார்கள்.

3.1 பயிற்சிக்காலம் ஒரு வருட காலமாகும். (இதில் ஒன்பது மாத காலத்திற்கு கோட்பாட்டு ரீதியான பயிற்சியும் மூன்று மாத காலத்திற்கு செயல்முறைப் பயிற்சியும் அடங்கும்.) திருப்திகரமாகப் பயிற்சியினைப் பூர்த்திசெய்யும் பயிலுநர்களுக்கான பரீட்சையில் சித்தியடையும் பயிலுநர்கள் மருந்துக் கலவை உத்தியோகத்தர் தரம் III பதவிக்கு நியமனம் செய்யப்படுவார்கள்.

3.2 பயிற்சிக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பயிலுநர்கள் பயிற்சிப் பாடசாலைகளில் நடைமுறையிலுள்ள சட்டதிட்டங்கள் மற்றும் சுகாதார அமைச்சினால் காலத்திற்குக் காலம் நடைமுறைப் படுத்தப்படும் ஏனைய கட்டளைகளுக்கும் உட்படுவார்கள். பயிற்சிக் காலத்தில் நடாத்தப்படும் பரீட்சைகளில் சித்திபெறத் தவறும் அல்லது அவர்களின் வேலையும் நடத்தையும் திருப்திகரமாக இல்லாவிட்டால் அல்லது தமது பயிற்சிப் பாடசாலையினது பரீடசை மற்றும் லீவு நிபந்தனைகளுக்கு அமையத் தவறும் பயிலுநர்கள் பயிற்சியின் எந்தச் சந்தர்ப்பத்திலும் எதுவித நட்டஈடுமின்றி பயிற்சியிலிருந்து நீக்கப்படுவார்கள்.

3.3 பயிற்சிப் பாடசாலைகளுக்குச் சேர்த்துக்கொள்ளப்படும்போது பயிலுநர்கள் தாம் இடையில் வெளியேறாது பயிற்சியை வெற்றிகரமாக முடிப்பதாகவும், பயிற்சியை முடித்துக் கொண்ட பின்னர் நியமனம் வழங்கப்பட்டால் சுகாதார அமைச்சு மற்றும் மாகாண சபைகளின் நிர்வாகத்திலுள்ள வைத்தியசாலைகள்/ தாபனங்களில் குறைந்தபட்சம் 5 வருடங்கள் சேவை செய்வதாகவும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்துடன் ஒப்பந்தமொன்று செய்துகொள்ள வேண்டும். பயிற்சி பெறும் காலத்தில் அவர்கள் பயிற்சியை விட்டு விலகினால் அல்லது பயிற்சியிலிருந்து வாபஸ் பெற்றால், மேலே 3 ஆம் பந்தியின் பிரகாரம் பயிற்சியிலிருந்து நிறுத்தப்பட்டால் பயிற்சிக் காலத்தின்போது அவருக்கு வழங்கப்பட்ட படிகளையும் மற்றும் அரசாங்கத்திற்கு ஏற்பட்ட செலவினங்களையும் அவர் சுகாதார அமைச்சுக்கு மீளளிக்க வேண்டும். அல்லாவிடில் ஒப்பந்தத்தில் கூறப்பட்டவாறு சம்பளத்தை மீளப்பெற நடவடிக்கை எடுக்கப்படும்.

3.4 இப்பயிற்சிநெறி ஒரு முழுநேரப் பயிற்சியாகும். ஆதலினால் கிழமையில் ஐந்து நாட்களிலும், சனிக்கிழமை முற்பகலிலும் பல்கலைக்கழகத்தில் அல்லது சுகாதார அமைச்சின்கீழ் அல்லது வேறு அரச நிறுவனத்தில் அல்லது வேறு நிறுவனத்தில் முழுநேரப் பயிற்சிநெறிகளில் பயிலுபவர்கள் இப்பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்கக் கூடாது. யாராவது அவ்வாறு விண்ணப்பித்து பின்பு ஒரு சந்தர்ப்பத்தில் தெரியவந்தால் பயிற்சி நெறியிலிருந்து/பதவியிலிருந்து விலக்கப்பட்டு அக்காலப்பகுதி வரை அரசினால் செய்யப்பட்ட எல்லாச் செலவுகளும் அறவிடப்படும்.

4. **வேறு தகைமைகள் :**

(i) இலங்கைப் பிரசையாயிருத்தல் வேண்டும் ;
(ii) நல்லொழுக்கமுடையவராயிருத்தல் வேண்டும் ;
(iii) சிறந்த உடல், உள ஆரோக்கியமிக்கவராகவிருத்தல் வேண்டும் ;
(iv) தான் விண்ணப்பிக்கும் மாவட்டத்தில் விண்ணப்ப முடிவுத் திகதியில் 3 வருட காலம் தொடர்ச்சியாக வசித்திருத்தல் வேண்டும்.

5. **பரீட்சை விபரம் :**

| | |
|---|---|
| நுண்ணறிவுப் பரீட்சை | - 100 புள்ளிகள் |
| விடயம் தொடர்பான தொழில் நுட்பப் பரீட்சை | - 100 புள்ளிகள் |

5.1 பரீட்சை கணிதம், கிரகித்தல் நுண்ணறிவுப் பரீட்சை மற்றும் இரசாயனவியல் ஆகியவற்றில் இரண்டு வினாத்தாள்களைக் கொண்டதாகவிருக்கும். ஒரு விடயம் சித்தியடைவதற்கு 40 புள்ளிகள் அல்லது அதற்கு அதிகமாக பெறுதல் வேண்டும். இரண்டு விடயங்களிலும் பெறப்படும் மொத்தப் புள்ளிகளைக் கொண்டு புள்ளிகள் கணிக்கப்படும்.

6. **சம்பளத் திட்டம்**.- பயிலுனர் தரம்.- பொது நிருவாக சுற்றறிக்கை 06/2006 (II) இன் பிரகாரம் சம்பளம் வழங்கப்படும்.

III ஆம் தரம் : 15,005 ரூபா. - 4 x 180 - 6 x 240 - 11 x 320 - 20 x 360 - ரூபா 27,885.

MN-3-2006(A). (பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 06/2006 (iv) இன் பிரகாரம்.

7. **வயதெல்லை**.- விண்ணப்பதாரிகள் 2014.08.08 ஆந் திகதியன்று 18 வயதுக்குக் குறையாமலும் 30 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

8. **சேவைக்கு அமர்த்தும் நிபந்தனைகள்**.- நியமனம் வழங்கப்படும் உத்தியோகத்தர்கள் நாட்டின் எப்பகுதியிலும் சேவையாற்றுவதற்கு விருப்பமுள்ளவராக இருத்தல் வேண்டும். நியமனம் நிரந்தரமானதும் ஓய்வூதியத்துக்குரியதுமாகும். விதவைகள், அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்குப் பங்களிப்புச் செய்தல் வேண்டும்.

9. அரசாங்க/அரச சார்பு நிறுவனங்களில் சேவையாற்றுபவர்கள் தமது திணைக்களத்தின்/தாபனத்தின் தலைவர் ஊடாக விண்ணப்பம் சமர்ப்பித்தல் வேண்டும்.

10. இந்த அறிவித்தலுக்கு அமையாத விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

11. விண்ணப்பங்கள் பெற்றுக்கொண்டமை பற்றி அறிவிக்கப்பட மாட்டாது.

12. தேவையான தகைமைகளையுடையவர்கள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அழைக்கப்படுவதுடன், இதுபற்றி இரண்டு வாரங்களுக்கு முன்னர் விண்ணப்பத்தில் குறிப்பிட்ட விலாசத்திற்கு அறியத்தரப்படும்.

பரீட்சை தொடர்பான விபரங்கள் குறித்த காலத்தில் www.health.gov.lk.com என்னும் இணையத்தளத்தில் சேர்க்கப்படும்.

13. விண்ணப்பிக்கும் முறைமை :

(அ) விண்ணப்பதாரிகள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்தின் பிரகாரம் தயாரிக்கப்படும் விண்ணப்பத்தினைப் பின்வரும் விலாசத்திற்கு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும் என்பதுடன் எந்தவொரு தனிப்பட்ட உத்தியோகத்தரது பெயருக்கும் அனுப்பக் கூடாது.

(ஆ) விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் முடிவுத் திகதி 2014.08.08 ஆகும்.

(இ) விண்ணப்பம் அனுப்பும் தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் ''மருந்துக் கலவையாளர் உத்தியோகத்தர் பயிற்சிக்குச் சேர்த்துக்கொள்ளல் - 2014'' என்பதும் எழுதப் பட்டிருத்தல் வேண்டும்.

(ஈ) பரீட்சைக் கட்டணம்.- பரீட்சைக் கட்டணம் 300 ரூபா ஆகும். இலங்கை வங்கியில் தப்ரபேன் கிளையில் சுகாதார சேவைப் பணிப்பாளர் நாயகத்தின் பெயரிலுள்ள 0007040244 எனும் கணக்கிலக்கத்திற்கு சேரும்படி இந்த நிதியை எந்த ஒரு இலங்கை வங்கிக் கிளையிலும் செலுத்தி, பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டை மாதிரி விண்ணப்பப்படிவத்தில் இல. 13 இன்கீழ் உள்ள பெட்டியினுள் கழராதவாறு ஒட்டுதல் வேண்டும். (பணமாகவோ முத்திரையாகவோ ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.)

விலாசம்.- பணிப்பாளர், (நிர்வாகம் 6), சுகாதார அமைச்சு, 'சுவசிறிபாய', இல. 385, சங்கைக்குரிய பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை, கொழும்பு 10.

14. **கையொப்பத்தை உறுதிப்படுத்துதல்**.- இலங்கை நிர்வாக சேவை/கல்வி நிர்வாக சேவை/அரசாங்க கணக்காளர் சேவை உத்தியோகத்தர்கள்/அரசாங்கப் பாடசாலை அதிபர்/சமாதான நீதவான்/சட்டத்தரணி அல்லது 2,40,360 ரூபாவுக்கு குறையாத ஆண்டுச் சம்பளம் பெறும் நிரந்தர ஓய்வூதியத் திட்டத்திற்குரிய பதவி வகிக்கும் அரசாங்க உத்தியோகத்தர் ஒருவரினால் விண்ணப்பதாரியினது கையொப்பம் உறுதிப்படுத்தல் வேண்டும்.

கவனிக்க வேண்டியவை :

* விண்ணப்பத்தின் எல்லாப் பிரிவுகளும் பூரணப்படுத்தப் பட்டுள்ளது எனவும், அத்தகவல்கள் சரியானவை என்றும் உறுதிப்படுத்தல் வேண்டும்.

* மேற்குறித்தபடி சேர்த்துக்கொள்ளப்பட்ட யாவரும் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான சகல சட்ட திட்டங்கள், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை விதிமுறைகள், இலங்கை தொழில்நுட்ப சேவைக் குறிப்பு விதிமுறைகள் மற்றும் சட்டதிட்டங்களுக்கும், சுகாதார அமைச்சினால் விதிக்கப்படும் கொள்கைகளுக்கும்

நிதிப்பிரமாணங்கள் மற்றும் பிரமாணங்களுக்கும் அரசினால் காலத்துக்குக்காலம் நடைமுறைப்படுத்தப்படும் ஏனைய கட்டளைகளுக்கும் உட்படுவார்கள்.

* பயிற்சிக்குச் சேர்த்துக்கொள்வது தொடர்பாக இவ்வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடாத எந்தவொரு விடயம் சம்பந்தமாக எழும் பிரச்சினைகளுக்கு சுகாதார அமைச்சின் செயலாளர் எடுக்கும் தீர்மானம் இறுதியானதாகும். இவ்வர்த்தமானி அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி அறிவித்தல்களில் வேறுபாடுகள் காணப்படின் சிங்கள மொழி அறிவித்தலே அதிகாரபூர்வமானதாகும்.

* இப்பயிற்சிக் காலத்தினுள் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடுதல் அல்லது தனிப்பட்ட முறையில் ஈடுபடுதல் தொடர்பாக உரிமைகள் ஏதும் இல்லை. இதே போன்று பயிற்சியின் பின்னர் குறித்த பதவியில் நியமனம் பெற்றால் அதன் பின்னரும் தனிப்பட்ட சேவையில் ஈடுபடுவதற்கு எதுவித உரிமைகளும் கிடையாது. இது சம்பந்தமாக தெரியவரின் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

சுதர்மா கருணாரட்ன,
சுகாதார அமைச்சின் செயலாளர்.

சுகாதார அமைச்சு,
"சுவசிறிபாய",
இல. 385, சங்கைக்குரிய பத்தேகம
விமலவங்ச தேரர் மாவத்தை,
கொழும்பு 10.
2014.06.09.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**சுகாதார அமைச்சு**

இலங்கை தொழில்நுட்பவியலாளர் சேவை மருந்துக்கலவை உத்தியோகத்தர் பதவிக்காக (திறந்த அடிப்படை) பயிற்சிநெறிக்கு மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளுதல் - 2014

| பரீட்சைக்குத் தோற்றும் மொழி : | | பரீட்சைக்குத் தோற்றும் மாவட்டம் : | |
|---|---|---|---|
| சிங்களம் - S | | 1 | |
| தமிழ் - T | | 2 | |
| ஆங்கிலம் - E | | 3 | |

1. (i) முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்தில்) : ----.
   (ii) முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்தில்) :----.
2. நிரந்தர வதிவிட விலாசமும் மாவட்டமும் :----.
3. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :----.
   தொலைபேசி இலக்கம் :----.
4. இலங்கைப் பிரசையா என்ற விபரம் :----.
5. ஆண்/பெண் விபரம் :----.
6. தமது நிரந்தர வதிவிடமாக விண்ணப்பதாரி குறிப்பிடும் மாவட்டம் :----.
7. தேர்தல் தொகுதி :----.
8. பிறந்த திகதியும் இடமும் :----.

2014.08.08 ஆந் திகதியன்று வயது :

வருடங்கள் [ ][ ] மாதங்கள் [ ][ ] நாட்கள் [ ][ ] திகதி :----.

9. விவாகமானவரா/விவாகமாகாதவரா ? :----.
10. விண்ணப்பதாரி தகுதிபெறும் பரீட்சைக்குத் தோற்றும் மொழி : ----.
11. கல்வித் தகைமைகள் :
    (அ) கல்விப் பொதுத்தராதர (சாதாரண) பரீட்சை :

முதல் அமர்வு :

வருடம் :----. சுட்டிலக்கம் :----.

| விடயம் | சித்தித் தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |
| 5. | |
| 6. | |
| 7. | |
| 8. | |
| 9. | |
| 10. | |

(ஆ) கல்விப் பொதுத்தராதர (உயர் தரம்) பரீட்சை :

வருடம் :----. சுட்டிலக்கம் :----.

| விடயம் | சித்தித் தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |

(இ) வேறு விசேட தகுதிகள், அனுபவம் :..................................
.............................................................................
.............................................................................
.............................................................................

12. நீங்கள் எப்போதாவது எந்தவொரு குற்றச் செய்கைக்கும் நீதிமன்றம் ஒன்றினால் குற்றவாளியாகக் காணப்பட்டீரா ? (ஆம் எனில் விபரம் தருக.) :..........................................................................
.............................................................................
.............................................................................

13. இவ்விண்ணப்பத்தில் என்னால் குறிப்பிடப்பட்ட விபரங்கள் உண்மையானதெனவும், சரியானவை எனவும் கௌரவமாக வெளிப்படுத்துகின்றேன். இதில் குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு தகவலும் உண்மையற்றதெனவும் அல்லது பிழையானவை எனவும் கண்டுபிடிக்கப்பட்டால் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்னராயின் விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதற்கும், தெரிவுசெய்யப்பட்டதன் பின்னராயின் எதுவித நட்டஈடுமின்றி சேவையிலிருந்து நீக்கப் படுவேன் என்பதையும் நான் ஏற்றுக்கொள்ளுகின்றேன்.

இலங்கை வங்கியில் 300 ரூபா செலுத்தி,
பெறப்பட்ட பற்றுச்சீட்டை கழராதவாறு ஒட்டவும்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

14. கையொப்பத்தை உறுதிப்படுத்துதல் :
இவ்விண்ணபத்தைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ......................................... என்பவரை எனக்கு தனிப்பட்ட முறையில் தெரியுமெனவும், அவர் ................................ திகதியில் எனது முன்னிலையில் தனது கையொப்பத்தை இட்டார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

உறுதிப்படுத்துபவரின் முழுப்பெயர் :----.
பதவி :----. (பதவி முத்திரையுடன்)
விலாசம் :----.
திகதி :----.

7-224

---

திருத்தம்

**மக்கள் தொடர்பாடல், தகவல் அமைச்சு**

அரசாங்க சேவை ஆணைக்குழு

**அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் இலங்கை அச்சீட்டு சேவையின் நிறைவேற்று அலுவலர் தரத்தின் வகுப்பு I தரம் III இற்கு ஆட்சேர்த்துக் கொள்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட /திறந்த போட்டிப் பரீட்சை- 2012**

விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியை நீடித்தல்

06.06.2014 ஆந் திகதிய 1866 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் மேற்குறிப்பிடப்பட்ட தலையங்கத்தின்கீழான அறிவித்தலின் விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியை 21.07.2014 ஆந் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளதென இத்தால் அறியத்தரப்படுகின்றது.

ஷரித்த ஹேரத்,
செயலாளர்,
மக்கள் தொடர்பாடல், தகவல் அமைச்சு.

2014, யுன் 27.

7-379

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**

**2013 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**

**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**

**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

**எல்லா வர்த்தமானிகளையும் www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும். தபால் அலுவலகம், "பொரல்லை" என்பதே மணி ஓடர்களுக்கான செலுத்தப்படும் அலுவலகமாகும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூபா | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 137 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 137 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 1,300 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,300 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பெறப்படாமை, முகவரி மாற்றம் போன்ற எல்லாத் தொடர்புகளுக்கும், கொழும்பு 8, அரசாங்க அச்சுத் திணைக்களம், அரசாங்க அழுத்தகருக்கே எழுதுங்கள்.**

14. **2013 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத்திற்கு மான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வதுதொகுதி | 4,160.00 | 9,340.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 580.00 | 950.00 |
| III வது தொகுதி (ஆக்க உரிமை மற்றும் வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள் முதலியன) | 405.00 | 750.00 |
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 890.00 | 2,500.00 |
| II ஆவது பகுதி (சட்ட சம்பந்தமானது) | 860.00 | 450.00 |
| III வது பகுதி (காணிகள்) | 260.00 | 275.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 2,080.00 | 4,360.00 |
| V வது பகுதி (பயண போக்குவரத்து சேவை முதலிய விண்ணப்பங்களுக்கான பட்டியல் மற்றும் புத்தகப் பட்டியல்) | 1,300.00 | 3,640.00 |
| VI வது பகுதி (யூரிமார் பெயர்ப்பட்டியல், வைத்திய அலுவலர் பட்டியல், பிறப்பு, இறப்பு பதிவாளர் பட்டியல் முதலியன) | 780.00 | 1,250.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வது தொகுதி | 40.00 | 60.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III வது தொகுதி | 15.00 | 60.00 |
| I வது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II வது பகுதி | 12.00 | 60.00 |
| III வது பகுதி | 12.00 | 60.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V வது பகுதி | 123.00 | 60.00 |
| VI வது பகுதி | 87.00 | 60.00 |

**எல்லா தனிப்பிரதிகளையும் கொழும்பு 5, பொல்ஹேன்கொடை, கிருளப்பனை மாவத்தை, இல. 163 எனும் முகவரியிலுள்ள அரச வெளியீட்டு பணியகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.**

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

**அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.**

**முக்கிய கவனிப்பு**.- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.**

**அட்டவணை-2014**

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **யூலை** | .. | வெள்ளி | 04.07.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 20.06.2014 |
| | | வெள்ளி | 11.07.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 27.06.2014 |
| | | வெள்ளி | 18.07.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 04.07.2014 |
| | | வெள்ளி | 25.07.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 11.07.2014 |
| **ஓகத்து** | .. | வெள்ளி | 01.08.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 18.07.2014 |
| | | வெள்ளி | 08.08.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 25.07.2014 |
| | | வெள்ளி | 15.08.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 01.08.2014 |
| | | வெள்ளி | 22.08.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 08.08.2014 |
| | | வெள்ளி | 29.08.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 15.08.2014 |
| **செத்தெம்பர்** | .. | வெள்ளி | 05.09.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 22.08.2014 |
| | | வெள்ளி | 12.09.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 29.08.2014 |
| | | வெள்ளி | 19.09.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 05.09.2014 |
| | | வெள்ளி | 26.09.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 12.09.2014 |

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2014 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.